செய்யுள்—உரை நடைப் பயிற்சி நூல்

SP. Nachiappan.

மா. ரா. அரசு அவர்களுக்கு
அன்புடன்
ரோஜா முத்தையா.
8 11 86

பதிப்பாளர் :
வித்வான் மா. இராசமாணிக்கம், B. O. L., L. T., M. O. L.,
தலைமைத் தமிழாசிரியர்,
முத்யாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி,
12 செகண்டு லேன் பீச், சென்னை.

பதிப்புரிமை]   1945   [விலை அணா 10

முகவுரை

1946-ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் S. S. L. C. தமிழ்த் தேர்வில், **புதியதாகப்** புகுத்தப் பட்டுள்ள (Part I a) 'செய்யுள்—உரைநடை'க் கேள்வியை முன்னிட்டுத் தயாரிக்கப்பட்டுள்ள இச் சிறு நூலில் 60 செய்யுட் பகுதிகள் தரப்பட்டுள்ளன. நூலின் முதலில், கல்வித் துறையினர் 'மாதிரி'யாகத் தந்துள்ள செய்யுட்களும் அவற்றுக்குரிய **விடைப் பயிற்சியும்** தரப்பட்டுள்ளன. இப்பயிற்சி 4-ஆம் பாரம் முதலே தொடங்கப் பெறவேண்டும். ஆதலின், ஒவ் வொரு பாரத்திற்கும் **20 பயிற்சிகள்** வீதம் 4, 5, 6-ஆம் பாரங்கட்கு **60 பயிற்சிகள்** தரப்பட்டுள்ளன. ஒவ் வொரு பயிற்சியிலும் அரும்பதங்கட்குப் பொருள் தரப்பட்டுள்ளது. இந்நூலில் இடம் பெற்றுள்ள செய்யுட்கள், சங்க நூல்கள்—இடைக்கால நூல் கள்—பிற்கால நூல்கள்—இன்றைய நூல்கள் எனப் படும் பலவகை நூல்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப் பட்டனவாகும். இச்செய்யுட்களைப் படித்துக் கேள்வி கட்கு விடை யெழுதிப் பழகுதலும் பொழிப்பு எழுதிப் பழகுதலும் S. S. L. C. தேர்வுக்கு நல்ல பயிற்சி ஆகும்.

தசரா, கிறிஸ்மஸ், பொங்கல் விழாக்கட்காக விடப்படும் விடுமுறைக் காலங்களில் இந்நூலிலிருந்து சில பயிற்சிகளை எழுதி வருமாறு மாணவரைத் தூண்டலாம். இது செய்யப்படல், வகுப்புகளில் நடத்தும் பயிற்சிகட்கு உறுதுணையாகும்.

மா. இராசமாணிக்கம்

செய்யுள்—உரைநடைப் பயிற்சி நூல்

S. S. L. C. Public Examination
Model Question Paper

Second Language (Group A), Part I (a).
(Comprehension)

மாதிரிப் பயிற்சி—I

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

Marks 18

* "நாளை நாளை என்பீ ராகில்
நமனுடை முறைநாள் ஆவதும் அறியீர்
நம்முடை முறைநாள் ஆவதும் அறியீர்
எப்போ தாயினும் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
நல்லார் என்னான் நல்குரவு அறியான்
தீயார் என்னான் செல்வரென் றுன்னான்

*　　*　　*　　*

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ
மாநிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ

---

* கபிலர் அகவல்

வாழ்நான்கு சாதிக்கு உணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக்கு உணவு காட்டிலுமோ
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலை தாணி யோர்க்கே
குலமும் ஒன்றே குடியும் ஒன்றே
வழிபடு தெய்வமும் ஒன்றே ; ஆதலால்,
முன்னோர் உரைத்த மொழிதவ றுமல்
எந்நாள் ஆயினும் இரப்பவர்க் கிட்டுப்
புலையுங் கொலையும் களவுந் தவிர்ந்து
நிலைபெற அறத்தில் நிற்பதை அறிந்து
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து
பேணி யுரைப்பது பிழையெனப் படாது
சிறப்புஞ் சீலமும் அல்லது
பிறப்பு நலந்தருமோ பேதை யீரே."

கேள்விகள் :—

1. எமன் எத்தகையவன் என்று கூறப்பட்டுள்ளான் ?
2. பூமியிற் பிறந்தார் யாவரும் சமம் என்பதற்கு ஆதாரமாக எடுத்துக் காட்டப்பட்டவை யாவை ?
3. எக்காரணத்தால் முன்னோர் மொழிந்த மொழி தவறாது வாழவேண்டும் என்று கூறப்பட்டுளது ?
4. தள்ளத் தக்கனவும் செய்யத் தக்கனவும் இன்ன இன்ன என்று தொகுத்து எழுதுக.
5. நன்மை பயப்பவை யாவை ?

விடைகள்

1. எமன் நமது வாழ்நாளில் ஒரு நாள் வருவான். அங்ஙனம் அவன் வரும் நாள் அவனது முறை நாள் ஆகும். அவனை நாம் போற்றினாலும் போகான் ; பொருளை லஞ்சமாகக் கொடுத்தாலும் அதனைப் பெற்று உயிரை விட்டுப் போகான் ; எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் போகான் ; தான் கொண்டு போக வந்த உயிரை விட்டுச் சுற்றத்தார்

உயிரைக் கொண்டு செல்லான் ; 'இவர் நல்லவர்; இவரை எப்படிக் கொண்டு செல்வது' என்று யோசியான் ; 'இவர் வறியவர்; இவரைக் கொண்டு செல்வதில் பயனில்லை' என்று விடான் ; 'இவர் தீயவர்' என்று விடான் ; 'இவர் செல்வர்' என்று நினைந்து விடமாட்டான்.

2. மழை எல்லோருக்கும் சமமாகத்தான் பெய்கிறது; காற்று எல்லோருக்கும் பொதுவாகத்தான் வீசுகிறது ; நிலம் எல்லோரையும் பொதுவாகத்தான் தாங்குகின்றது ; சூரியனும் பொதுவாகத்தான் காய்கிறது ; 'மேல் நான்கு சாதிகட்கு உணவு நாட்டில்—கீழ் நான்கு சாதிகட்கு உணவு காட்டில்' என்னும் விதியில்லை. எல்லோர்க்கும் உணவு நாட்டிலிருந்துதான் கிடைக்கிறது. செல்வமும் வறுமையும் தவப்பயனும் இறப்பும் எல்லாருக்கும் ஒருபடித்தானவையே ஆகும்.

3. 'குலமும் ஒன்றே; குடியும் ஒன்றே; இறப்பும் ஒன்றே ; பிறப்பும் ஒன்றே ; வழிபடு தெய்வமும் ஒன்றே' ஆதலால் நாம், முன்னோர் உரைத்த மொழி தவறாமல் வாழ வேண்டும்.

4. புலை, கொலை, களவு ஆகிய மூன்றும் தள்ளத் தக்கன ; இரப்பவர்க்கீதல், அறத்தில் நிலைபெற நிற்றல் என்பன கொள்ளத் தக்கன.

5. பரம்பொருள் உணர்ச்சியுடன் கூடிய சிறப்புடைமையும் ஒழுக்கமுடைமையுமே நன்மை பயப்பனவாகும்.

மாதிரிப் பயிற்சி—II

I. கீழ்க்காணும் செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களான் அமைத்து 15 வரிக்குள் எழுதுக :—

* அந்த வேளையிற் கவுசிகன் விரைந்துவந் "தரசே,
இந்த நோதக வெய்தலென் எனக்குநீ முன்னம்
தந்த நாடி'யான் தந்திலேன்' எனுமொழி சாற்றி
உந்த நாடுமிவ் வுயிர்களும் பெறுகென" உரைத்தான்.

* * * *

வீரவேந்தனும் மங்கையும் அவனடி வீழ்ந்திங்கு,
"யாரை நீயிந்த ஏழைமைக் காட்செய்தி" என்றார்.

* * * *

"செய்மை யண்மையில் உயிர்க்கொரு துணையெனச் சிறந்த
வாய்மை யாலகம் தூய்மையாம் மற்றிலை ; புறத்தைத்
தூய்மை செய்வது நீரலாற் சொல்லின்வே றுளதோ ?
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெமக் கறிதி.

(நோய்மை - துன்பம்)

"புலைய னும்விரும் பாதவிப் புன்புலால் யாக்கை
நிலையெ னுமருண்டு உயிரினும் நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம் ;
கலையு ணர்ந்தநீ எமக்கிது கழறுவ தழகோ ?

(கழறுதல்-கூறுதல்)

"பதியி ழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியி ழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினும் கட்டுரை யிழக்கிலேம்" என்றார் ;
மதியி ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்.

* அரிச்சந்திர புராணம்

திரண்ட கருத்து

அந்த வேளையில் கௌசிகன் அரிச்சந்திரனிடம் விரைந்து வந்து, "அரசே, நீ ஏன் வருந்தவேண்டும்? நீ எனக்குத் தந்த நாட்டைத் 'தரவில்லை' என்று கூறி, உன் நாட்டையும் நாட்டு உயிர்களையும் பெற்றுக்கொள்" என்றான். அப்பொழுது வீர வேந்தனும் அரசியும் அவனைப் பணிந்து, "எம்மையா இவ்வித நிலைக்கு ஆளாக்கப் பார்க்கிறீர்!" என்றனர். "உயிர்க்கு இம்மையிலும் மறுமையிலும் துணையாவது வாய்மை ஒன்றே. அதுவே அகத்தைத் தூய்மை செய்வது. புறத்தைத் தூய்மை செய்ய வல்லது நீராகும். நீர் எத்தகைய துன்பம் செய்யினும் வாய்மையைக் காப்பதே எமக்கு நோன்பாகும். கேவலம் புலையனும் விரும்பாத இந்த உடலோடு கூடிய வாழ்வை நிலையென மயங்கி, உயிரினும் சிறந்த சத்தியம் தவறோம். எல்லாக் கலைகளிலும் வல்ல நீ எம்மைத் தவறுமாறு சொல்வது அழகாகுமா? நாங்கள் ஊர், நிதி இழந்தோம்; செல்வ மகனையும் இழந்தோம். எங்களுக்குக் கிடைக்க இருக்கும் நற்கதியையும் இழக்கத் தயார்; ஆயின், சொன்ன சொல் தவறோம்," என்றனர். அவ்வளவில் கௌசிகன் அறிவு குழம்பிப் பேச அறியாது மறைந்தான்.

1

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* மங்கைய ராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவம் செய்திட வேண்டும்அம்மா !

பங்கயக் கைநலம் பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா ! 1

(பங்கயம் - தாமரை. கைநலம் - கையினால் ஏற்படும் நன்மை.)

உள்ளம் தளர்வுறும் நேரத்திலே—உயிர்
ஊட்டும் உரைகள் உரைப்பவரார் ?

அள்ளி எடுத்து மடியிருத்தி—மக்கள்
அன்பைப் பெருக்கி வளர்ப்பவரார் ? 2

(உயிர் - புத்துயிர்)

நீதி நெறியில்லா வம்பருமே—நல்ல
நேர்வழி வந்திடச் செய்பவரார் ?

ஓதிய மானம் இழந்தவரை—உயர்
உத்தம ராக்க முயல்பவரார் ?

(வம்பர் - வீணர். ஓதிய - நூல்களில் சிறப்பாகச் சொல்லப்பட்ட.)

அன்பினுக் காகவே வாழ்பவரார் ?—அன்பில்
ஆவியும் போக்கத் துணிபவரார் ?

இன்ப வுரைகள் தருபவரார் ?—வீட்டை
இன்னகை யால்ஒளி செய்பவரார் ?

(ஆவி - உயிர். இன்நகை - இனிமையான சிரிப்பு.)

---

* பெண்ணின் பெருமை.

ஆசிரியர் : தேசிக விநாயகம் பிள்ளை.

கேள்விகள் :—

1. 'மாதவம் செய்திடவேண்டும்'—யார்? எதற்காக?
2. பாரில் அறங்கள் வளர்வது எப்படி?
3. 'உயிர் ஊட்டும் உரைகள் உரைப்பவர்' யார்? எப்பொழுது?
4. 'மக்கள் அன்பைப் பெருக்கி வளர்ப்பவர் யார்'? எப்படி வளர்ப்பர்?
5. வம்பர் இயல்பு யாது? மாதர் அவரை என்ன செய்யக்கூடும்?
6. 'உத்தமராக்க முயல்பவர்' யார்? யாரை?
7. மங்கையர் எதற்காக வாழ்கின்றனர்? ஆவியும் போக்குவர்—எதற்காக?
8. 'தருபவர்' யார்? எவற்றை?
9. 'வீட்டை ஒளி செய்பவர்' யார்? எதனால் செய்வர்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

2

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்,
வாச(ல்)தொறும் முட்டுண்ட தலையில் புண்ணும்,
செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்,
தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தேன் அப்பா!
'கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும், வேடன்
கொடுங்காலால் உதைத்தபுண்ணும், கோப மாகப்
பஞ்சவரில் ஒருவன்வில் அடித்த புண்ணும்
பாரென்றே காட்டிநின்றான் பரமன் றானே.

---

* தனிப்பாடல்கள்—நகைச்சுவை.
ஆசிரியர் : இராமச்சந்திர கவிராயர்.

(தீரும் - நீக்கியருளும். சங்கரன் - சிவன். கொஞ்ச மல்ல - (உன்போலச்) சிறிதல்ல. பிரம்படி - பாண்டியனால் அடிக்கப்பட்ட பிரம்படி. கொடுங் காலால்-வலிய காலால். வேடன் - வேடனாகிய கண்ணப்பன். பஞ்சவரில் ஒருவன் - பாண்டவரில் ஒருவனாகிய அர்ச்சுனன். அடித்த - பாசுப தாஸ்திரம் பெற வந்தபோது அடித்த.)

கேள்விகள் :—

1. காலில் புண் உண்டாகக் காரணம் யாது?
2. ஏன் தலையில் புண் உண்டானது?
3. நெஞ்சிற் புண் உண்டானதேன்?
4. சங்கரன்பால் சேரக் காரணம் என்ன?
5. சங்கரன்பால் சென்றவர்க்கு அச்சங்கரன் எவற்றைக் காட்டினான்?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

3

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* ஆவின, மழைபொழிய, இல்லம் வீழ,
அகத்தடியாள் மெய்நோவ, அடிமை சாவ,
மாவீரம் போகுதென்று விதைகொண் டோட,
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்,
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளவொண்ணா விருந்துவரச் சர்ப்பம் தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களோ தட்சணைகள் 'கொடு'வென் றாரே.

(ஆசன - பசு கன்றை யீன. அடியாள் - வேலைக்காரி. மா ஈரம் - விதைப்பதற்கு ஏற்ற நிலத்து ஈரம். மறித்துக்

---

* தனிப்பாடல்கள்—'துன்பத்துட் துன்பம்'.
ஆசிரியர் : இராமச்சந்திர கவிராயர்.

கொள்ள - தடுக்க தீண்ட - (அவனைக்) கடிக்க. கோவேந்தர் - அரசர். கடமை - வரி.)

கேள்விகள் :—

1. மழை பெய்யும் பொழுது 'ஆ' என்ன செய்தது?
2. மழை பெய்ததால் உண்டான நஷ்டம் யாது?
3. அச்சமயத்தில் அகத்தடியாள் நிலைமை யாது?
4. அடிமை என்னவானான்?
5. 'விதைகொண்டோட'—எதற்காக ஓடவேண்டும்?
6. வழியில் மறித்தவர் யாவர்? ஏன் மறித்தனர்?
7. எதிரே சென்றவன் யார்?
8. வீடு தேடி வந்தவர் யாவர்?
9. அவ்வமயம் நேர்ந்த ஆபத்து யாது?
10. கோவேந்தர் கேட்டது யாது?
11. குருக்கள் என்ன கேட்டார்?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

4

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களி(று)எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

(புறந்தருதல் - காப்பாற்றுதல். வடித்தல் - கூர்மையாக்குதல். நல்கல் - கற்பித்தல். முருக்கி - அழித்து. சமம் - போர். களிறு - ஆண் யானை. காளை - வீரன்.)

---

* புறநானூறு—அவரவர் கடமை.
ஆசிரியர் : பொன் முடியார்.

கேள்விகள் :—

1. இச்செய்யுளில் கூறப்பட்டவர் யார் யார்?
2. தாயின் கடமை யாது?
3. தந்தையின் கடமை யாது?
4. கொல்லன் கடமை யாது?
5. வேந்தன் கடமை யாது?
6. காளையின் கடமை யாது?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

5

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
உத்தம ராகி ஒழுகுவமே. 1

(மறை - வேதம் ; குறள்.)

பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து—கம்பன்
பாரிற் பொழிந்ததீம் பாற்கடலை
நாவில் இனிக்கப் பருகுவமே—நூலின்
நன்னயம் முற்றும் தெளிகுவமே. 2

(நயம் - இனிமை.)

தேனிலே ஊறிய செந்தமிழின்—சுவை
தேரும் சிலப்பதி காரமதை

---

* சிறந்த மூன்று இலக்கியங்கள்.
ஆசிரியர் : தேசிக விநாயகம் பிள்ளை.

ஊனிலே எம்முயிர் உள்ளளவும்—நிதம்
ஓதி உணர்ந்தின் புறுவோமே. 3

(நிதம் - நாள்தோறும்.)

கேள்விகள் :—

1. வள்ளுவர் திருமறையின் சிறப்பு யாது ?
2. கம்பன் பாக்கள் எத்தகையன ?
3. சிலப்பதிகாரத்தின் சிறப்பு யாது ?
4. இம்மூன்று நூல்கள் சம்பந்தமாக நாம் என்ன செய்யவேண்டும் ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

6

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* அர(ன்)அவ(ன்) இடத்திலே ஐங்கரன் வந்துநின்(று),
"ஐய,என் செவியை மிகவும்

அறுமுகன் கிள்ளினான்" என்றே சிணுங்கிடவும்,
அந்தன்வே லவனை நோக்கி,

விரைவுடன் வினவவே, "அண்ணன்என் சென்னியில்
விளங்குகண் எண்ணினன்" என,

வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து, "நீ அப்படி
விகடம்ஏன் செய்தாய்?" என,

"மருவுமென் கைந்நீளம் முழமளந்தான்" என்ன
மயிலவன் நகைத்து நிற்க,

மலைஅரையன் உதவவரும் உமையவளை நோக்கி, "நின்
மைந்தரைப் பாராய்" எனக்

---

* தனிப்பாடல்கள்-பிள்ளையார், முருகர் பூசல்.
ஆசிரியர் : சிவப்பிரகாச சுவாமிகள்.

கருதரிய கடலாடை உலகுபல அண்டம்
கருப்பமாப் பெற்ற கன்னி

கணபதியை அருகழைத்(து)அகமகிழ்வு கொண்டனள்
களிப்புடன் உமைக் காக்கவே.

(ஐங்கரன் - பிள்ளையார். அத்தன் - சிவன். விகடம் - வேடிக்கை. மயிலவன் - முருகன். கன்னி - உமை.)

கேள்விகள் :—

1, ஐங்கரன் தந்தையிடம் முறையிட்டது யாது ?
2. அத்தன் வேலவனை என்ன கேட்டான் ?
3. அத்தன் பிள்ளையாரைக் கேட்ட கேள்வி யாது ?
4. அதற்குப் பிள்ளையார் தந்த பதில் யாது ?
5. அத்தன் உமையவளை நோக்கி யாது கூறினன் ?
6. உமையவள் என்ன செய்தாள் ?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நம் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக :—

7

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின் வரும் வினக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* கம்பன் எனுங்கவிக் குஞ்சரத் தோடுநல்
காளமே கன்,ஒட்டக் கூத்தனுஞ்சீர்

பொங்கு புகழேந்தி, வள்ளுவன், ஔவையிப்
புலவர் பிறந்த தமிழ்நாடே. 1

போரில் புறங்கொடா வீரர்க ளும்,பல
காரில் சிறந்தகை வள்ளல்களும்,

---

* நாட்டுப் பாடல் -- தமிழ்நாடு.

ஆசிரியர் : வித்வான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை.

பாரில் மழைகாணும் பாவைய ரும்பெரும்
சீரின் உறைந்த தமிழ்நாடே. 2

(காரில் - மேகம்போல)

நாகரி கம்மெனும் நல்ல மரத்திற்கு
நல்லொழுக் கம்மெனும் நீர்பாய்ச்சிப்

போகக் கனிகண்டு புண்ணியம் தந்ததும்
பொய்யில் புகழ்நம் தமிழ்நாடே. 3

பொய்யும் புரட்டும் அறியாது ; வீணில்
போரும் தொடுக்க முயலாது ;

நொய்ய உரைத்(து)உயிர் நையா து; நுவல்
நூல்வழிச் செல்லும் தமிழ்நாடே. 4

(நொய்ய - அற்பமாக. நைதல் - வருந்துதல்.)

கேள்விகள் :—

1. தமிழிற்சிறந்த புலவர்கள் யாவர் ?
2. வீரர், வள்ளல்கள், பாவையர் இவர்தம் சிறப்பு யாது ?
3, 'பொய்யில் புகழ்' தமிழ்நாடு எதனைத் தந்தது ? எப்படி ?
4. தமிழ்நாட்டு இயல்பு யாது ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

8

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* சேற்றில் பிறந்திடும் கமலமலர் கடவுளது
திருமுடியின் மே(ல்)இ ருக்கும் ;

---

* குமரேச சதகம்—' குணத்திற்குப் பெருமை.'
ஆசிரியர் : குருபாத தாசர்.

திகழ்சிப்பி உடலில் சனித்தமுத்(து) அரசனது
தேகத்தின் மே(ல்)இ ருக்கும் ;

போற்றியிடு பூச்சியின் வாயினால் பட்டென்று
பூசைக்கு நேச மாகும் ;

புக(ல்)அரிய வண்(டு)எச்சி(ல்) ஆனதேன் தேவர்
கொள்

புனிதஅபி டேக மாகும் ;

சாற்(று)அரிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
சவாதுபுழு(கு) அனைவர்க் கும்ஆம் ;

சாதிஈ னத்தில் பிறக்கினும் கற்றோர்கள்
சபையின்மேல் வட்ட(ம்) அன்றோ ?

மாற்றிச் சுரத்தினை விபூதியால் உடல்குளிர
வைத்தமெய்ஞ் ஞான முதலே !

மயி(ல்)ஏறி விளையாடு குகனே ! புல் வய(ல்)நீடு
மலைமேவு குமரே சனே !

(கமலம் - தாமரை. சனித்த - பிறந்த. நேசம் - ஏற்றது. அபிடேகம் - நீராட்டுதல். சாற்றுதல் - புகழ்ந்து பேசுதல். 'மாற்றி......முதலே' - முருகன் ஞானசம்பந்தராக அவதரித்தார் என்பது ஒரு சாரார் கருத்து.)

கேள்விகள் :—

1. கமலம், முத்து, நூல், தேன், கோரோசனை—இவற்றின் பிறப்பிடங்கள் எவை ?
2. இவை என்ன நிலைகளை அடைந்துள்ளன ?
3. இவற்றால் உணர்த்தப்படும் செய்தி யாது ?
4. முருகன் எவ்வாறு பாராட்டப்பட்டுள்ளான் ?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

9

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக:—

* கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
கிழங்குகல்லி எடுப்போம்;

குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில்வைத்துத் தொடுப்போம்;

பழம்பிழிந்த கொழுஞ்சாறும்
தேறலும்வாய் மடுப்போம்;

பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம்;

செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்;

சினவேங்கைப் புலித்தோலின்
பாயலிற்கண் படுப்போம்;

எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்;

எங்கள்குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகாண் அம்மே!

(கல்லுதல் -தோண்டுதல். தேறல் - தேன். மரவுரி - மரப்பட்டையால் ஆன ஆடை. கயற்கணி - கயல்மீன் போன்ற கண்களையுடையவள்; மீனாக்ஷியம்மன்.)

கேள்விகள் :—

1. 'எடுப்போம்'—எதனை? எப்படி?
2. 'தொடுப்போம்'—எதனை? எதனில் வைத்து?
3. 'வாய் மடுப்போம்'—எவற்றை?

---

* மீனாக்ஷி அம்மை குறம்—குறக்குடி இயல்பு.
ஆசிரியர்: குமரகுருபரர்.

4. 'உடுப்போம்'—எவற்றை ?
5. விருந்தருந்தக் கொடுக்கப்படுவன யாவை ?
6. குறவர் எதன்மீது படுப்பர் ?
7. குறவர் எழுந்தவுடன் யாரை வணங்குவர் ? ஏன் ?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

10

I, கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* வான வெளிதனிலே — கவிந்தெழு
மாலைப் பொழுதினிலே
கூனப் பிறைவரவே—சிவன்திருக்
கோலம் தெளிவேனடி. 1

(கூனம் - வளைந்த. கோலம் - அழகு.)

முற்றிய ஆழியிலே—அலைவந்து
மோதி எறிகையிலே
கற்றைக் கதிர்எழவே—உமைதிருக்
காட்சி வியப்பேனடி. 2

(கற்றைக்கதிர் - கூட்டமான ஒளி)

தாமரைப் பொய்கையிலே—கதிர்ஒளி
தட்டு(ம்)அவ் வேளையிலே
பூமலர்(து) ஓங்கிடவே—அரியென்று
போதம் நயப்பேனடி. 3

(அரி - திருமால். போதம் - அறிவு.)

---

* இயற்கையின் தெய்வீகக் காட்சி.
ஆசிரியர் : தேசிக விநாயகம் பிள்ளை.

மாமலைச் சாரலிலே—மதமிகு
வாரணக் கூட்டத்திலே
காமலர்ச் சிந்திடவே—கணேசர்என்
கண்முனே நிற்பாரடி. 4

(வாரணம் - யானை. கா - சோலை.)

மேட்டு நிலங்களிலே—தினைக்கதிர்
விம்மி விளைகையிலே
காட்டு மயில்வரவே—குகனும்என்
காதல் விளைப்பாரடி. 5

(விம்மி - மிகுந்து. குகன் - முருகன்)

கேள்விகள் :—

1. சிவன் உணர்வு எப்பொழுது உண்டாகும்? ஏன்?
2. உமையின் காட்சி எப்பொழுது தோன்றும்? ஏன்?
3. அரியின் எண்ணம் எப்பொழுது எழும்? ஏன்?
4. கணேசர் நினைவு எப்பொழுது உண்டாகும்? ஏன்?
5. குகன் நினைவு எப்பொழுது எழும்? ஏன்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

11

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* தேட்டாளன் காயல் துரைசீதக்
காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்பம் நாட்டிவைத்
தான்தமிழ் நாவலரை

* தனிப்பாடல்கள். இவை சீதக்காதி இறந்தகாலத்துப் பாடப்பட்டவை.

ஆசிரியர் : படிக்காசுப் புலவர், நமச்சிவாயப் புலவர்.

ஓட்டாண்டி யாக்கி அவர்கள் தம்
வாயில் ஒருபிடிமண்

போட்டான் அவனும் ஒளித்தான்
சமாதிக் குழிபுகுந்தே. 1

(தேட்டம் - செல்வம். காயல் - துறைமுக நகரம்.)

பூமா(து) இருந்தென்? புவிமா(து)
இருந்தென்ன? பூதலத்தில்

நாமா(து) இருந்தென்ன? நாமிருந்(து)
என்ன?நல் நாவலர்க்குக்

கோமான் அழகமர் மால்சீதக்
காதி கொடைமிகுந்த

சீமான் இறந்திட்ட போதே
புலமையும் செத்ததுவே. 2

(பூமாது - திருமகள். புவிமாது - நிலமகள். நாமாது - கலைமகள்.)

கேள்விகள் :—

1. சீதக்காதி தமிழ்நாவலரை ஓட்டாண்டியாக்கினன் என்பதன் கருத்து யாது?
2. யார் யார் இருந்தும் பயன் இல்லை? ஏன்?
3. 'புலமை செத்தது'—எப்பொழுது? ஏன்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

12

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினுக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* "மலையிடை எனக்கு வாய்த்த
மரகத மணியே, செம்பொன்
இல(கு)ஒளிக் குன்றே எந்தாய்,
எம்பிரான், நின்கண் புண்ணீர்
கலுழ்தரற்(கு) என்னை கொல்லோ
காரணம்? திருவாய் சற்றும்
அலர்கிலை என்கொல்?" என்றான்
ஆவிசோர்ந்(து) அருகு சென்றான். 1

(பிரான் - தலைவன். கலுழ்தர - வடிய. அலர்கிலை - திறந்து பேசவில்லை.)

'யானினி இதற்(கு)என் செய்வேன் !'
எனஎண்ணி நிற்ப, 'ஊனுக்(கு)
ஊனிடல் வேண்டும்' என்னும்
உரைகண்டு, தன்கண் வாங்கி
வானவன் தடங்கண் இட்டால்
மாறு(ம்)என்(று) உளம்வ லித்துக்
கானவர் பெருமான் தன்கண்
கணையினால் இடந்திட் டானால். 2

(ஊன்-இறைச்சி; புண். வானவன்-சிவன். வலித்து-உறுதிசெய்து. கானவர்பெருமான்-கண்ணப்பன். இடந்து-பெயர்த்து.)

இடந்ததன் கண்ணை அண்ணல்
இறைகண்ணில் அப்பச் சோரி,
மடந்தையோர் பாகன் ஆங்கே
மாற்றினான்; அதனைக் கண்டான்;
அடங்கரு மகிழ்ச்சி என்னும்
ஆழ்கடல் அதனுள் தாழ்ந்து

---

* சீகாளத்திப் புராணம்—கண்ணப்பன் அன்பு.
ஆசிரியர்: சிவப்பிரகாச சுவாமிகள்.

முடங்(கு)உளை மடங்கல் அன்னான்
முழவுத்தோள் கொட்டி ஆர்த்தான். 3

(அண்ணல் - கண்ணப்பன். இறை - சிவபிரான். மடந்தை ஓர்பாகன் - உமையை ஒரு பக்கத்தே உடைய சிவன். முடங்குஉளை - வளைந்துள்ள பிடரி. மடங்கல் - ஆண்சிங்கம். முழவு - மத்தளம்.)

கேள்விகள் :—

1. லிங்கத்தின் கண்ணில் புண்ணீர்கண்ட திண்ணன், லிங்கத்தை நோக்கி யாது கூறி வருந்தினான்?
2. அவன் பிறகு தனக்குத்தானே யாது சொல்லித் துன்புற்றான்?
3. எவ்'வுரை' அவன் நினைவுக்கு வந்தது?
4. பிறகு அவன் அவ்வுரைப்படி என்ன செய்தான்?
5. 'மடந்தையோர் பாகன்' செய்தது யாது?
6. திண்ணன் 'முழவுததோள் கொட்டி ஆர்த்தான்'— ஏன்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நம் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

13

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* ஒருமகவுக்(கு) அளித்திடும்போ(து) ஒருமகவு
கைநீட்டும்; முந்திமேல் வீழ்ந்(து)

இருமகவும் கைநீட்டும் ; மும்மகவும்
கைநீட்டும் ; என்செய் வாளால்!

பொருமிஒரு மக(வு)அழும்;கண் பிசைந்தழும் ; மற்(று)
ஒருமகவு, புரண்டு வீழாப்

---

* குசேல உபாக்கியானம்—குசேலன் வறுமை.
ஆசிரியர் : தேவராஜப் பிள்ளை.

பெருநிலத்தில் கிடந்(து)அழு மற்(று)ஒருமக(வு);எங்
ஙனம்சகிப்பாள் ? பெரிதும் பாவம்! 1

(மகவு - பிள்ளை. பொருமி - விம்மி)

'அந்தோ !என் வயிற்றெழுந்த பசியடங்கிற்(று)
இல்லை !''என அழுமால் ஓர்சேய் ;

'சிந்தாத கஞ்சிவார்க் கிலையெனக்(கு)அன்
னாய் !'எனப்பொய் செப்பும் ஓர்சேய் ;

முந்தார்வத்(து) ஒருசேய்மி சையப்புகும்போ(து)
இனிஒருசேய் முடுகி ஈர்ப்ப,

நந்தாமற்(று) அச்சேயும் எதி(ர்)ஈர்ப்பச்
சிந்துதற்கு நயக்கும் ஓர்சேய். 2

(அந்தோ - ஐயோ ! சேய் - பிள்ளை. அன்னாய்-தாயே. ஆர்வம் - ஆசை. மிசைய - உண்ண. முடுகி - விரைந்து. நந்தா - பின்னிடாத. நயக்கும் - விரும்பும்.)

'அடுத்தமனைச் சிறுனொருவன், " இன்றுமது
அகங்கறிஎன் அட்டார் ?" என்று

தொடுத்துவினா யினனால்அச் சொற்பொருள்யா(து)?
அதுதான் எச்சுவைத்(து)?அன் னாய்!நீ

எடுத்துரை', என் றிடுமகவுக்(கு) உரைக்கி(ல்), அது
'செய்'யெனி(ல்)'என் செய்வாம்' என்று,

'மடுத்தவஃ(து) அறிந்திலேன்', என்மற்றொன்(று)
உரைத்ததனை மறக்கச் செய்வாள். 3

(சிறுன் - சிறுவன். அட்டார் - சமைத்தார். தொடுத்து- தொடர்ந்து.)

கேள்விகள் :—

1. தாய், பிள்ளைகட்குக் கஞ்சி வார்க்கும் பொழுது அப்பிள்ளைகள் என்னென்ன செய்வது வழக்கம் ?
2. ஓர் சேய் என்ன சொல்லி அழும் ?
3. மற்றோர் சேய் என்ன முறையிடும் ?

4. பிற பிள்ளைகள் என்ன செய்வார்கள் ?

5. அடுத்தமனைச் சிறுவனால் உண்டான துன்பம் யாது ?

6. கேள்வி கேட்ட மகனுக்குத் தாய் என்ன விடை கூறினாள் ? அவன் மனநிலையை எப்படி மாற்றினாள் ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

14

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின் வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக:—

* சிந்தையுள் மகிழ்ச்சி பொங்கச்
சிரமிசைக் கரங்கள் கூப்பிச்

சந்தமார் நிலத்தில் வீழ்ந்து
தாழ்ந்தெழீஇக் குடந்தம் பட்டு

முந்துதா னையு மொடுக்கி
முன்னர்நிற் பாரை நோக்கி

வந்தகா ரிய(ம்)என் என்றான்
வகுத்துரை யாடல் உற்றார் : 1

(முந்து தானை — முன் ஆடை. குடந்தம் பட்டு.)

" மாமறைத் தலைவ, போற்றி ;
மதிக்குல விளக்கே, போற்றி ;

காம(ர்)இந் திரன்முன் னோர்
காண்பதற்(கு) அரியாய், போற்றி ;

தாமரைக் கண்ணா, போற்றி ;
தரியலர் ஏறே, போற்றி ;

---

* குசேல உபாக்கியானம் - குசேலர் வருகையைக் காவலர் கண்ணனுக்கு அறிவித்தல்.

ஆசிரியர் : தேவராஜப் பிள்ளை.

தோமறு செல்வம் வாய்ந்த
துவாரகைக் கிறைவ, போற்றி. 2

(தோம்அறு - குற்றம் அற்ற)

"ஆதிநாள் ஐய, நின்னோ(டு)
அருங்கலை கற்று ளானும்;
போதவும் சிறந்த நட்புப்
பூண்டுகொண் டவனும்; கந்தை
மேதகக் கொண்ட சீரான்;
மெய்ம்மறை யவர்கு லத்தான்;
கோதறு குணத்தின் மிக்கான்;
குசேல(ன்)என்(று) இயம்பி னன்பேர். 3

(போதவும் - மிகவும்.)

"வற்றிஎன்(பு) எழுந்த யாக்கை
மாதவன் நின்மேல் வைத்த
பற்றினை யெம்ம னோரோ
பகுத்தறிந்(து) அளக்க வல்லார்!
இற்றைநாள் வந்து வாயில்
இருக்கின்றான்; எதிர்ந்த போரில்
வெற்றிகொள் கழற்கால் வேந்தே!
விண்ணப்ப(ம்) இதுவே" என்றார். 4

(யாக்கை - உடல்.)

கேள்விகள் :—

1. வாயிற்காவலர் கண்ணன் எதிரில் எங்ஙனம் நின்றனர்?
2. அவர்கள் அப்பெருமானை எவ்வாறு வாழ்த்தினர்?
3. அவர்கள் குசேலனைப்பற்றிக் கூறிய செய்தி யாது?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

15

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக:—

* மலிதரும் அன்பின் வந்த
வண்பொதி அவிழ்த்து நோக்கி,

'வலிதரும் அவற்றுள் நன்று
வாய்த்தது நமக்கி(து)' என்று,

ஒலிதரு கழற்கால் ஐயன்
ஒருபிடி அவலைக் காதல்

பொலிதர எடுத்து வாயில்
போகட்டுக் கொண்டான் மாதோ. 1

(மலி - மிகுந்த. பொதி - சிறு மூட்டை. போகட்டுக் கொண்டான் - போட்டுக் கொண்டான்.)

"செறிதரு சுவைத்(து)ஈ(து); என்றும்
தேவர்க்கும் அரிய(து) ஆகும்;

அறிதரு விருப்பின் இல்லில்
அமைத்ததே; பழைதும் அன்று;

குறிதரு விலைப்பாற் சென்று
கோட(ல்)இவ் வளத்த தோ ?" என்(று)

உறிஅளை வாரி உண்டோன்
ஒருபிடி அவல்தின் றானே. 2

(செறிதரு-நிறைந்த. குறிதரு-குறிக்கப்பட்ட. கோடல்-கொள்ளுதல். அளை - தயிர்.)

"முன்னு(ம்)இவ் அவ(ல்)ஒன் றேனும்
முனைமுறிந் ததுவும் இன்று;

பன்னுமுட் டையு(ம்)இன்(று) ஆகும்;
பட்டஅங் கையு(ம்)ம ணக்கும்;

---

* குசேல உபாக்கியானம்—கண்ணன் அவல் தின்னல்
ஆசிரியர்: தேவராஜப் பிள்ளை.

கொன்னும்வாய் செறிப்பின், அம்ம !
குளமும்வெண் டுவ(து)இன்(று)" என்ன,

உன்னும்பல் உலகும் உண்டோன்
ஒருபிடி அவல்தின் றனே. 3

(முன்னும் - உறுதி வாய்ந்த. பன்னும்-சொல்லப்படும். முட்டை - பதர். கொன்னும் - மணக்கும். குளம்-வெல்லம்.)

அரியஅன் பினிற்கொ டுத்தல்
இழிந்ததா யினும்சி றந்த(து) ;

இரியு(ம்)அன் பினிற்கொ டுத்தல்
இழிந்ததே சிறந்த தேனும் ;

பெரியவர் புகழப் பட்டப்
பெருந்தவக் குசேல மேலோன்

உரியஅன் பினையுங் கூட்டி
ஒருபிடி அவல்தின் றனே. 4

(இரியும் - மாறுபடும்.)

கேள்விகள் :—

1. 'கழற்கால் ஐயன்' என்ன சொல்லி அவலைப் போகட்டுக் கொண்டான் ?
2. 'உறி அளை வாரி உண்டோன்' என்ன சொல்லிக் கொண்டே ஒரு பிடி அவல் தின்றான் ?
3. 'பல் உலகும் உண்டோன்' யாது கூறி 'அம்ம !' என்று வியந்தான் ?
4. கண்ணன் அவல் தின்னக் காரணம் என்ன ?
5. கண்ணன் அவலை எவ்வாறு சிறப்பித்துப் பேசினான் ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

16

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின் வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* மாசிலாக் குலத்து வந்தாள் ;
வருவிருந்(து) உவப்ப ஊட்டும்
நேச(ம்)மிக்(கு) உடையாள் ; கொண்கன்
நினைப்(பு) அறிந்(து)ஒழுகும் நீராள் ;
தேசுறு வாய்மை உள்ளாள் ;
சினந்திடல் என்றும் இல்லாள் ;
பேசுதிண் கற்பு வாய்ந்தாள் ;
பெற்றதே கொண்டு (உ)வப்பாள். 1

(மாசு - குற்றம். கொண்கன் - கணவன். நீராள்-தன்மையள். தேசு - புகழ்.)

மலையிட்ட செல்வத் தார்கள்
மகிழலர் மகவும் தாரான்
அலையிட்ட முள்தாள் செய்ய
அம்புயத்(து) உறைவோன் ; ஓர்ஏழ்
தலையிட்ட இருபான் மைந்தர்த்
தந்தனன் ; பெருமை யன்றோ!
சிலையிட்ட தழும்பு வாய்ந்த
தெரிய(ல்)அம் தடந்தோள் வேந்தே. 2

(முள்தாள் - முள் பொருந்திய தாளை உடைய. அம்புயம் - தாமரை. ஏழ் தலையிட்ட இருபான் - இருபத்தேழு. சிலை - வில். தெரியல் - மாலை.)

* பல்எலாம் தெரியக் காட்டிப்
பருவரல் முகத்திற் கூட்டிச்

---

* குசேல உபாக்கியானம்—குசேலன் வாழ்க்கை.
ஆசிரியர் : தேவராஜப் பிள்ளை.

சொல்எலாம் சொல்லி நாட்டித்
துணைக்கரம் விரித்து நீட்டி

மல்எலாம் அகல ஓட்டி
மானம்என் பதனை வீட்டி

இல்எலாம் இரத்தல், அந்தோ!
இழி(வு)இழி(வு) எந்த ஞான்றும். 3

(பருவரல் - துன்பம். துணைக்கரம் - இரு கைகள். மல்- வலிமை. வீட்டி - அழித்து.)

இருநிலத்(து) யாவர் கண்ணும்
ஏற்பதை இகழ்ச்சி என்ன,

ஒருவிய உளத்தான் காட்டில்
உதிர்ந்துகொள் வாரும் இன்றி

அருகிய நீவா ரப்புல்
தானியம் ஆராய்ந்(து) ஆராய்ந்(து)

உருவஒண் நகத்தால் கிள்ளி
எடுத்(து)உடன் சேரக் கொண்டு, 4

(ஒருவிய - நீக்கிய. உருவ - அழகிய.)

வந்துதன் மனைக்கை நீட்ட,
வாங்கிமற்(று) அவற்றைக் குற்றி

அந்தமெல் லியல்பா கஞ்செய்(து)
அதிதிக்கோர் பாகம் வைத்துத்

தந்ததன் பங்(கு)அ யின்று,
தவலரும் உவகை பூத்து

மந்திர மறைகட்(கு) எட்டா
மாலடி நினைந்(து) இருப்பான். 5

(மனை - மனைவி. அதிதி–விருந்து. தவலரும் - கெடுதல் இல்லாத. மால் - திருமால்.)

கேள்விகள் :—

1. சுசீலையின் சிறப்பியல்புகள் எவை?
2. அம்புயத்துறைவோன் இயல்பு யாது?
3. இரத்தலின் இழிவு எப்படி விளக்கப்பட்டுள்ளது?
4. குசேலன் காட்டில் எதனைச் சேகரித்தான்? ஏன்?
5. அதனை மனைவி யாது செய்தாள்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

17

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின் வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக:—

* மக்களைமுன் காணு மனநடுங்கா வெய்துயிராப்
புக்(கு)எடுத்து வீரப் புயத்தணையா—"மக்கா(ள்),நீர்
என்மக்கள் போல்கின்றீர் ; யார்மக்கள்?"
என்றுரைத்தான்
வன்மக் களியானை மன். 1

(வெய்துஉயிரா-பெருமூச்சுவிட்டு. வன்மம்-வல்லமை. மன்-நளன்.)

"மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம் ;
அன்னை தனைக் கான்விட்(டு) அவ(ன்)ஏக,—இந்
நகர்க்கே
வாழ்கின்றோம் ; எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்" என்றார் அழுது. 2

ஆங்கவர் சொன்ன உரைகேட்(டு) அழிவெய்தி,
நீங்கா உயிரோடு நின்றிட்டான்;—பூங்காவில்

---

* நளவெண்பா—நளனும் அவன் பிள்ளைகளும்.
ஆசிரியர் : புகழேந்தியார்.

வள்ளம்போல் கோங்கு மலரும் திருநாடன்
உள்ளம்போல் கண்ணீர் உகுத்து. 3

(அழிவெய்தி - வருந்தி. வள்ளம் - கிண்ணம். கோங்கு - ஒருவகை மலர்.)

"உங்கள் அர(சு)ஒருவ(ன்) ஆள,நீர் ஓடிப்போந்(து)
இங்கண் உறைதல் இழுக்கன்றோ?—செங்கை
வளவரசே", என்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து. 4

"நெஞ்சால்இம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லா(து)
அஞ்சாரோ மன்னர், அடுமடையா,—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலாய், எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி." 5

(மாற்றம் - சொல். அடுதல் - சமைத்தல். மடையன் - சமைத்தல் தொழில் உடையவன்.)

"மன்னர் பெருமை மடையர் அறிவரோ!
உன்னை அறியாது உரைசெய்த—என்னை
முனிந்தருளல்" என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்(து)உருகி நீர்வாரக் கண். 6

(முனிதல் - கோபித்தல். முடிசாய்த்து - தலைவணங்கி. நீர்வார - கண்ணீர் ஒழுக.)

கேள்விகள் :—

1. 'வன்மக்களியானை மன்' மக்களை என்ன செய்தான்? என்ன கேள்வியைக் கேட்டான்?
2. அம்மக்கள் 'அழுது' கூறியது யாது?
3. அக்கூற்றைக் கேட்ட 'திருநாடன்' நிலைமை யாது?
4. 'திருநாடன்' இளவரசை நோக்கி யாது கூறினான்?
5. இளவரசு சினந்து கூறியது யாது?
6. அதற்கு 'மடையன்' என்ன கூறினான்? அவன் பட்ட துன்ப நிலை யாது?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

18

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின் வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* அரவுகடித்(து) அரசிளங்கோ இறந்தான் என்ப(து)
அறியாமல் வெகுண்(டு) இறைவன்,
"யாரோ இந்த

இரவுதனில் பிணஞ்சுடுவார்? அறிவோம்" என்று
எழுந்திருந்து விரைந்(து) ஓடி, "ஏடி, மூடி,

தரஉரிய பொருள் எனக்குத் தாரா தேநீ
தனியேஇப் பனிஇருளில் சவம்கொணர்ந்து

கரவி(ன்)அழல் சுடுவ(து)உனக்(கு) அடைவோ !"
என்னுக்
கால்வீசிக் கான்முளையை எடுத்(து)எறிந்தான். 1

(அரவு - பாம்பு. இறைவன் -அரசன். மூடி - அறிவற்றவள். சவம் - உயிரற்ற உடல். கரவு - வஞ்சகம். கான்முளை - பிள்ளை.)

"துஞ்சியமைந் தனைஎடுத்துச் சுமந்து போந்து
சுடுவா(ர்)அற்(று) இடுகாட்டில் தோள்மேல்
ஏற்றிப்

பஞ்சிபடும் பாடுபடும் பாவி பேற்குப்
பணம்எது? கொள்ளிமுறிப் பாதி எது ?

நெஞ்சுதளர்ந்(து) அருவினையேன் வருந்தக் கண்டு
நீ இரங்காய்?" என இரந்து நிற்குங் காலை,

---

* அரிச்சந்திர புராணம் - சுடு காட்டில் அரிச்சந்திரனும் சந்திரமதியும்.

ஆசிரியர் : ஆசுகவிராயர்.

வஞ்சிதிரு மணிமிடற்றில் வயங்கா நின்ற
மங்கலநாண் கண்(டு)இறைவன் மறித்தும்
சொல்வான்: 2

(துஞ்சிய - இறந்த. கொள்ளிமுறிப்பாதி - கொள்ளித் துண்டம். வயங்குதல் - விளங்குதல்.)

"நல்லைநல்லை அறச்சமர்த்தி நீயே கண்டேன்;
நன்னுதலார் அனைவரினும் இந்திர சாலம்
வல்லைவல்லை; விறகுகளும் களவே; செம்பொன்
மங்கலநாண் உன்கழுத்தில் இருக்க ஏதும்
இல்லைஎனச் சொல்லுவது சற்றும் ஏலா(து);
இதனைஎனக்(கு) ஈவா(ய்)" என்(று) இயம்ப,
வேடர்
பல்ல(ம்)உயிர் நிலைவாயிற் பட்ட மான்போற்
பதைபதைத்துப் பைந்தொடியாள் பதறி
வீழ்ந்தாள். 3

(அற - முழுதும். பல்லம் - அம்பு.)

கேள்விகள்:—

1. அரிச்சந்திரன் சவத்தை எடுத்தெறிந்தான்? ஏன்?
2. சந்திரமதி தன் எளிய நிலையை எப்படி விளக்கினாள்?
3. மங்கலநாண் கண்ட அரிச்சந்திரன் சந்திரமதியை நோக்கி யாது கூறினான்?
4. சந்திரமதி துடித்து வீழ்ந்தாள் - எதுபோல?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

19

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக:—

* மானைப் பழித்த விழியுடையாள்—ஒரு
மாமயில் போலும் நடையுடையாள்

தேனைப் பழித்த மொழியுடையாள்—பெண்ணின்
தெய்வ மெனத்தகும் சீருடையாள். 1

ஆறாகக் கண்ணீர் வடித்துநின்றாள்—கையில்
ஆண்மக(வு) ஒன்றையும் ஏந்திநின்றாள்

தேறாத உள்ளமும் தேற்றுவிக்கும்—ஞான
தேசிகன் சேவடி போற்றிநின்றாள். 2

(தேறாத - தெளியாத. தேசிகன் - ஆசாரியன், புத்தன்.)

சந்திர மதிபோல் நின்ற
தையலை நோக்கி ஐயன்,

"வெந்துயர் விளைந்த தென்னை?
விளம்புக" எனலும், அன்னாள்

நைந்து நொந்(து) உருகிஉள்ளம்
நயனத்தின் வழியாய் ஓட

மைந்தனைக் காட்டி, இந்த
மறுமொழி கூறல் உற்றாள்: 3

(நயனம் - கண்.)

"சிரித்தமுகம் எனமலர்ந்து செழித்தசெடி நடுவே
சிறுமகனும் விளையாடித் திரிந்திடும்அவ் வேளை

விரித்தபட மெடுத்(து)அரவொன்(று) அடுத்[தொருகைபற்றி
விளங்குமணிக் கடகமென வளைந்துகிடந்[ததுவே. 4

---

* புத்தர்—மகனை இழந்த தாய்.
ஆசிரியர் :—தேசிகவிநாயகம் பிள்ளை.

"பால்மண(ம்)மா றாதசிறு பாலகனும் அறியான்;
படவரவை விளையாட்டுப் பண்டமெனக் [கொண்டான்;

வாலினையும் தலையினையும் வயிற்றினையும் வலித்து
வருத்தமெழச் சிறுகுறும்பு செய்துவிட்டான் [ஐயோ! 5

(வலித்து - இழுத்து.)

"சிறுபொழுது சென்றிடஎன் செல்வமகன் உடலில்,
சீதமிகப் பரந்து(உ)ணர்வு தீர்ந்துவிட்ட(து) [ஐயா,

நிறுத்தவிழி ஒருநிலையில் நின்றுவிட்ட(து) ஐயா,
நீட்டியகால் மடங்காது நிமிர்ந்துவிட்ட(து) [ஐயா, 6

(சீதம் - குளிர்ச்சி.)

"காடு மலையும் கடந்துவந்தேன்—உன்னைக்
கண்டு துயரெல்லாம் போக்கவந்தேன்;

வாடு மலர்ச்செண்டு போல்கிடக்கும்—இந்த
மைந்தன் உயிர்எழச் செய்யும் ஐயா." 7

கேள்விகள் :—

1. பிள்ளையை ஏந்தி நின்ற தாய் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளாள்?
2. ஞான தேசிகன் சிறப்பு யாது?
3. சிறுவன் ஏன் இறந்தான்?
4. சிறுவன் இறந்தமைக்குரிய குறிகள் யாவை?
5. தாய் ஞான தேசிகனை யாது வேண்டினாள்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

20

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப்பின்வரும் வினக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* "ஐயமிடு மனைகளிலே மரணம் என்றும்
அறியாத மனையேதும் இல்லை இல்லை ;
வையகத்தில் பிறப்புளதேல் இறப்பும் உண்டு;
மாற்றரிய விதியிதுவென்(று) உணர்ந்து கொண்
[டேன்;
கையமர்ந்த மகவினையும் கானில் இட்டேன் ;
கண்விழியாப் பிணம்வைத்துக் காப்ப(து)
[உண்டோ?
செய்யதிரு வடிபணிந்து போற்றி இந்தச்
செய்தியினைத் தெரிவிக்க வந்தேன்" என்றாள். 1

(ஐயம் - பிச்சை. கான் - காடு.)

மங்கைமனத் தெளிவையெலாம் உரைத்த உண்மை
வார்த்தையினால் அறிந்(து)அவளை நோக்கி,
"அம்மா,
எங்கு(ம்)இலாப் பொருள்தேடச் சென்று நீயும்,
யான்நினைத்த பொருளினையே பெற்று வந்தாய்;
தங்கு(ம்)இந்த உலகியற்கை மாறு(து); அம்மா,
தனயனைநீ எண்ணிமனம் தளர வேண்டா ;
அங்க(ம்)எலாம் வாயாக அழுதிட் டாலும்
அவ(ன்)எழுந்து நின்துயரம் அகற்ற(ல்)
[உண்டோ? 2

(தனயன் - மகன். அங்கம் - உடல். அகற்றல் - நீக்குதல்.)

---

* புத்தர், மகனை இழந்த தாய்க்கு உண்மையை உணர்த்தல்.

ஆசிரியர் : தேசிக விநாயகம் பிள்ளை.

"இம்மா நிலத்(து)இவ் உண்மையெலாம்
யானும் அறியச் செல்கின்றேன் ;

அம்மா நீயும் உன்மகனை
அடக்கம் செய்போ" என்(று)உரைத்தான்

வெம்மா வினையின் வேரறுத்து
விளங்கும் ஞான ஒளிகண்டிங்(கு)

எம்மா தவரும் தொழுதேத்த
எழிலார் கமலத்(து) எழுந்தோனே. 3

கேள்விகள் :—

1. தாய் ஞான தேசிகனிடம் வந்து யாது கூறினாள் ?
2. அவர் அதற்கு என்ன பதில் அளித்தார் ?
3. ஞான தேசிகர் எத்தகையவர் ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நம் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

21

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* கல்லாத ஒருவனைநான் 'கற்றாய்' என்றேன் ;
காடெறியும் மறவனை'நா டாள்வாய்' என்றேன் ;

பொல்லாத ஒருவனைநான் 'நல்லாய்' என்றேன் ;
போர்முகத்தை அறியானைப் 'புலியே(று)' என்றேன் ;

'மல்லாரும் புயமெ'ன்றேன் சூம்பற் றோளை ;
வழங்காத கையனைநான் 'வள்ளல்' என்றேன் ;

---

* தனிப்பாடல்கள்—பொய் வருணனையின் பயன்.
ஆசிரியர் : இராமச்சந்திர கவிராயர்.

இல்லாது சொன்னேனுக் 'கில்லை' என்றான் ;
யானுமென் றன் குற்றத்தால் ஏகின்றேனே.

(எறியும் - வெட்டும். பொல்லாத - கொடுமையை யுடைய. புலியேறு - (வீரத்தில்) ஆண் புலியைப் போன்றவன். மல் ஆரும் புயம் - மறபோருக்குரியதோள். கூம்பல் - சுருங்கித் திரைந்த. குற்றப - தகுதி இல்லாதவனைத் தகுதி உடையான் என்று பணைத்திறகாகக கூறயது.)

கேள்விகள் :—

1. புலவர் 'கற்றாய்' என்றார்—யாரை ?
2. அவர் 'நாடாள்வாய்' என்றார்—எவனை ?
3. அவர் யாரை 'நல்லாய்' என்றார் ?
4. அவர் யாரைப் 'புலியேறு' என்றார் ?
5. அவர் 'கூம்பல் தோளை' எவ்வாறு சிறப்பித்தார் ?
6. அவர் யாரை 'வள்ளல்' என்றார் ?
7. அவன் இல்லை' என்றான்—யாருக்கு ?
8. 'யானும் ஏகின்றேனே'—எதனால் ?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

22

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின் வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக:—

* " ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கிநீர்
ஆக்கிய யாகத் தவியுணவை

ஈட்டும் கருணை இறையவர் கைகளில்
ஏந்திப் புசிப்பரோ? கூறுமையா! 1

(பொசுக்கி - தீயிலிடடு வாட்டி)

---

* மலரும் மாலையும்—புத்தரின் அறிவுரை.
ஆசிரியர் : தேசிக விநாயகம் பிள்ளை.

"மைந்தருள் ஊமை மகனை ஒருமகன்
வாளால் அறிந்து கறிசமைத்தால்,

தந்தையும் உண்டு களிப்பதுண்டோ?—இதைச்
சற்றுநீர் யோசித்துப் பாருமையா. 2

"மேடையில் நீங்களும் மூடிப் படுத்திட
மெல்லிய கம்பளி தானளித்து

வாடையி லாடிக் கொடுகுவதும்—அதன்
வஞ்சகச் செய்கையோ? சொல்லுமையா!" 3

(வாடை - குளிர்காற்று. கொடுகுதல் - குளிரால்வாடி நடுங்குதல்)

"காட்டுப் புலியின் கொடுமையஞ்சி—உங்கள்
கால்நிழல் தாங்கிய ஆடுகளை

நாட்டுப் புலியெனக் கொல்லுவதோ—அந்த
நான்மறை போற்றிய நீதிஐயா. 4

(நான்மறை - நான்கு வேதம்)

"மண்ணில் வளர்ந்திடும் புல்லையுண்ணும்;—வான
மாரி பொழிந்திடும் நீரையுண்ணும்;

எண்ணிநீர் செய்யும் உதவியென்னும்?—இதை
ஏனோ உணர்ந்திலீர் மானிடரே." 5

கேள்விகள்:—

1. 'இறைவர் ஏந்திப் புசிப்பரோ'?—எதனை? ஏன் புசியார்?
2. 'இதைச் சற்றே நீர் யோசித்துப் பாரும்'—எதனை? ஏன்?
3. 'அதன் வஞ்சகச் செய்கையோ?'—எது?
4. 'நாட்டுப்புலி'—யார்? எப்படி?
5. 'இதை ஏனோ உணர்ந்திலீர்?'—எதை?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நம் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

23

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின் வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* வேங்கடமே தென்குமரி வேலைஎல்லை நாடு
மென்மைகன்னி இனிமைகனி மென்மைமொழி நாடு
தேங்கமழும் பொதிகைமலை தென்றலுமிழ் நாடு
திருமலைகள் தொடர்மலைகள் தெய்வமலை நாடு
பாங்குபெறு பாலிபெண்ணை பாவைபொன்னி நாடு
பாவளர்த்த வைகையொடு பழம்பொருனை நாடு
தேங்குசுனை பளிங்கருவி தெளிசாரல் நாடு
சிற்றோடை கால்பரந்த செய்யதமிழ் நாடே. 1

(வேலை - கடல். தேம் - இனிமை. பாலி - பாலாறு. பொன்னி - காவிரி. கால் - வாய்க்கால்.)

'யாதும்ஊர் எவருங்கேளிர்' என்றுணர்ந்த நாடு
'எவ்வுயிர்க்கும் அன்புசெய்க' என்றிசைத்த நாடு
'ஓதுகுலம் தெய்வ(ம்)ஒன்றே' என்றுகொண்ட நாடு
'ஒக்குமுயிர் பிறப்பென்னும்' ஒருமைகண்ட நாடு
'நாதன்அன்பு நீதிஇன்பு நட்(பு)'என்ற நாடு
'நாமார்க்குங் குடியல்லோம்' என்றிருந்த நாடு
தீதில்லா மொழிவளர்க்கத் தெளிவுபெற்ற நாடு
'செந்தண்மை' விருந்தளிக்கும் தெய்வத் தமிழ்
நாடே. 2

(கேளிர் - சுற்றத்தார். ஒக்கும் - சமமாகும். நாம் யார்க்கும் குடிஅல்லோம் - நாம் எந்த அரசனுக்கும் குடிமக்கள் அல்லோம்.)

கேள்விகள் : —

1. தமிழ் நாட்டு எல்லைகள் எவை ?
2. தமிழ் நாட்டு மலைகள் எவை ?

---

* நாட்டுப் பாடல்—தமிழ்நாடு.
ஆசிரியர் : திரு. வி. கலியாணசுந்தர முதலியார்.

3. தமிழ் நாட்டு ஆறுகள் எவை?
4. இந்நாடு எதனை 'உணர்ந்த' நாடு?
5. இஃது எதனை 'இசைத்த' நாடு?
6. இஃது எதனைக் 'கொண்ட' நாடு?
7. இஃது எதனில் 'ஒருமை கண்ட' நாடு?
8. இந்நாட்டின் பிற பண்புகள் எவை?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

24

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின் வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக:—

* அந்தரம்ஒன் றறியாத வடகலிங்கர்
குலவேந்தன் அனந்த பன்மன்
வெந்தறுகண் வெகுளியினால் வெய்(து)உயிர்த்துக்
கைபுடைத்து வியர்த்து நோக்கி, 1

"வண்டினுக்குந் திசையானை மதங்கொடுக்கும்
மலர்க்கவிகை அபயற்(கு) அன்றித்
தண்டினுக்கும் எளியனோ?" எனவெகுண்டு
தடம்புயங்கள் குலுங்க நக்கே, 2

(அபயன் - முதற் குலோத்துங்கன். நக்கே - சிரித்து.)

"கானரணும் மலையரணும் கடலரணும்
சூழ்கிடந்த கலிங்கர் பூமி
தானரண முடைத்தென்று கருதாது
வருவதுமத் தண்டு போலும்!" 3

---

* கலிங்கத்துப் பரணி—அனந்தபன்மன் வீரவுரை.
ஆசிரியர்: ஜயங்கொண்டார்.

கேள்விகள் :—

1. அனந்தபன்மன் யாவன் ?
2. அவன் அடைந்த மாறுபாடுகள் எவை ?
3. அவன் புயஙகள் குலுங்க நக்கான்—ஏன் ?
4. தண்டு எது ?
5. அஃது எதனைக் கருதவில்லை ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நம் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

25

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* அரியது கேட்கின், வரிவடி வேலோய் !
அரிதரிது மானிட ராதல் அரிது ;
மானிட ராயினும், கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது ;
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது ;
ஞானமுங் கல்வியு நயந்த காலையும்
தானமுந் தவமும் தான்செய லரிது;
தானமுந் தவமும் தான்செய்வ ராயின்,
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

(அரியது - அருமையுடையது. வரி - செவ்வரி. வடி - கூர்மையான. வேலோய் - வேல் போன்ற கண்ணையுடையவளே. பேடு - ஆண்மையில்லாத (பெண்மை மிகுதியும் உடைய) ஆண் உருவம். நயத்தல் - விரும்புதல்.)

---

* தனிப்பாடல்கள்—அரிய செயல்கள்.
ஆசிரியர்: ஔவையார்.

கேள்விகள் :—

1. 'அரியது' எது எது என்று முறையே கூறப்படுகின்றன?
2. வானவர் நாடு வழி திறப்பது எப்பொழுது?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

26

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

*உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப்பு(ஓ) ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயு(ம்)மனந் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னு(து) அவருள்
அறிவுடை யோ(ன்)ஆ(று) அரசுஞ் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே.

(உற்றுழி - துன்பம் வந்த காலத்து. பிற்றை நிலை - வழிபாடு. முனியாது - வெறுக்காது. ஆறு - வழியில்.)

கேள்விகள் :—

1. எங்ஙனம் கல்வி கற்றல் நன்று?
2. 'தாயும் மனந்திரியும்.'—எப்பொழுது? ஏன்?
3. எவன் ஆறு அரசும் செல்லும்? ஏன்?

---

* புறநானூறு—கல்வியின் சிறப்பு.

ஆசிரியர்: பாண்டியன் - ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்.

4. 'அவன் கண் படும்'—எவன்? எவன் கண்? ஏன்?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

27

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

*'எல்லாம் அறிந்தவரும் ஏதுமறி யாதவரும்
இல்லை'யெனும் இவ்வுலகமீ(து)

ஏதுமறி யாதவன் எனப்பெயர் தரித்துமிக
ஏழைக்குள் ஏழையாகிக்

கல்லாத அறிவிற் கடைப்பட்ட நா(ன்)அன்று
கையினால் உண்மைஞானம்

கற்பித்த நின்னருளி னுக்(கு)என்ன கைம்மாறு
காட்டுவேன்! குற்றேவல்நான்;

'அல்லார்ந்த மேனியொடு குண்டுகண் பிறைஎயிற்(று)
ஆபாச வடிவமான

அந்தகா! நீயொரு பகட்டால் பகட்டுவ(து)
அடாதடா! காசுநம்பால்

செல்லாத டா!'என்று பேசவா யதுதந்த
செல்வமே! சத்தாகிஎன்

சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோம யானந்தமே!

(கையினால் - கை அமைப்பினால்; அஃதாவது சின்முத்திரை என்னும் ஞான முத்திரையால். அல் - இருள். குண்டு கண் - ஆழமான கண். அந்தகன் - யமன். பகடு - எருமைக்கடா. காசு-சூழ்ச்சி. தேசோ மயானந்தம் - ஒளி மயமாக உள்ள இன்ப வடிவம்.)

---

* தாயுமானவர் பாடல்—இறைவன் அருள்தன்மை.

கேள்விகள் :—

1. உலகப் பழமொழி யாது?
2. தாயுமானவரிடம் காணப்பட்ட குறைபாடுகள் யாவை?
3. இறைவன் அவருக்கு உண்மை ஞானம் எவ்வாறு கற்பித்தார்?
4. யமனது ஆபாச வடிவம் யாது?
5. அவனைப் பார்த்துத் தாயுமானவர் என்ன சொல்லுகிறார்? அங்ஙனம் சொல்லக் காரணம் என்ன?
6. இப்பாட்டிலிருந்து, 'கடவுள் இலக்கணம்' யாதெனத் தெரிகிறது?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நம் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

28

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* அற்பர்க்கு வாழ்வுசற் றதிகமா னால்விழிக்(கு)
யாவருரு வுந்தோன் றிடா(து);
அண்டிநின் றேநல்ல வார்த்தைகள் உரைத்தாலும்
அவர்செவிக் கேறி டாது;
முற்பட்ச மானபேர் வந்தாலும் 'வாரு'மென
மொழியவும் வாய்வ ராது;
மோதியே வாதப் பிடிப்புவந் ததுபோல
முன்காலை யகல வைப்பார்;
விற்பன மிகுந்தபெரி யோர்செய்தி சொன்னாலும்
வெடுவெடுத்(து) ஏசி நிற்பார்;

---

* குமரேச சதகம்—அற்பரின் வாழ்வு.
ஆசிரியர் : குருபாத தாசர்.

விருதா மகத்துவப் பேயது சவுக்கடி
விழும்போது தீரும் என்பார்

மற்புயந் தனி(ல்)நீப மாலையணி லோலனே !
வள்ளலே ! வடிவே லவா !

மயிலேறி விளையாடு குகனே !புல் வயனீடு
மலைமேவு குமரே சனே !

(அண்டி - அணுகி பட்சம் - அன்பு. விற்பனம்-அறிவு. நீபமாலை - கடம்பமலர் மாலை.

கேள்விகள் :—

1. அற்பர்க்கு யாவர் உருவும் தோன்றாது—ஏன் ?
2. அவர் செவிக்கு ஏறாதது எது ?
3. அவர்க்கு 'வாய் வராது ?'—எதனைச் சொல்ல ? ஏன் ?
4. அவர் 'காலை அகல வைப்பார்'—ஏன் ?
5. அவர் 'ஏசி நிற்பர்'—எப்பொழுது ? ஏன் ?
6. 'விருதா மகத்துவப் பேய்'—எது ?
7. அஃது எப்போது தீரும் ?
8. குமரேசன் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளான் ?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

29

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* முட்புதர்கள் மொய்த்ததரை எங்கும்—எதிர்
முட்கருங் கற்களும்நெ ருங்கும்—மக்கள்
இட்டடி எடுத்(து)எடுத்து
வைக்கையிலே கால்களில்த டுக்கும் —உள் நடுங்கும்.1

* காட்டு வருணனை.
ஆசிரியர் : பாரதி தாசன்.

கிட்டிமரவேர்கள்பல கூடும்—அதன்
கீழிருந்து பாம்புவிரைந்(து) ஓடும்—மர
மட்டையசை வால்புலியின் [வாடும். 2
குட்டிகள்போய்த் தாய்ப்புலியைத் தேடும்—பின்

நீள்கிளைகள் ஆல்விழுதி னோடு—கொடி
நெய்துவைத்த நற்சிலந்திக் கூடு—கூர்
வாள்எயிற்று வேங்கையெலாம்
வால்சுழற்றிப் பாயவருங் காடு—பள்ளம் மேடு. 3

(எயிறு - பற்கள்.)

கேளொடும் கிளம்பிவரும் பன்றி—நிலம்
கிண்டுகிழங் கெடுத்த தன்றி—மிகு
தூளிபடத் தாவுகையில்
ஊளையிடும் குள்ளநரி குன்றில்—புகும் ஒன்றில். 4

(கேள் - சுற்றம். கிண்டு - கிழித்து; தோண்டி. தூளி- தூசி.)

வானிடையோர் வானடர்ந்த வாறு—பெரு
வண்கிளை மரங்களென்ன வீறு—நல்ல
தேனடை சொரிந்ததுவும்
தென்னைமரம் ஊற்றியதும் ஆறு—இன்பச் சாறு. 5

(வீறு - பெருமை.)

கானிடைப் பெரும்பறவை நோக்கும்—அது
காலிடையே காலிகளைத் தூக்கும்—மற்றும்
ஆனினம் சுமந்தமடி
ஆ(று)எனவே பால்சுரந்து தீர்க்கும்—அடை
[ஆக்கும். 6

(பெரும்பறவை - பருந்து முதலியன. காலிகள் - கன்றுகள்.)

கேள்விகள் :—

1. காட்டில் உள்ள இயற்கைத் துன்பங்கள் எவை?
2. காட்டிடை வாழும் பிராணிகள் எவை? அவை என்ன செய்யும்?

3. காட்டு மரங்களைப்பற்றி இங்குக் கூறப்பட்டுள்ள செய்திகள் யாவை?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

30

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை
கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே!
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே!

(தாவிய - வாமன அவதாரத்தில் அளந்த. சே அடி - சிவந்த அடி. தம்பி - இலக்குவன். சோஅரண் - வலி சிறந்த மதில். சேவகன் - இராமன். சீர் - பெருமை.)

பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையும் திருவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன
கண்ணே! 2

(மாயவன் - மாயம் உடையவன். உலகு......விரி கமல உந்தி - உலகம் எல்லாம் தோன்றுதற்குக் காரணமான தாமரையை உடைய நாபி. செய்ய - சிவந்த.)

---

* சிலப்பதிகாரம்—படர்க்கைப் பரவல்.
ஆசிரியர் : இளங்கோவடிகள்.

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்(து)ஆ ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே!
நாராய ணாவென்னா நாவென்ன நாவே! 3

(மடம் - அறியாமை. கஞ்சன் - கம்சன். கடந்தான் - அகப்படாதவன். ஆரணம் - வேதம். ஏத்தாத - துதியாத.)

கேள்விகள் :—

1. சேவகன் யாவன்? அவன் 'சீர்' என்ன?
2. திருமாலின் வடிவ அழகு எங்ஙனம் சிறப்பிக்கப் பட்டிருக்கிறது?
3. 'வஞ்சம் கடந்தான்'—யாருடைய வஞ்சம்? கடந்தவன் யாவன்?
4. 'தூது நடந்தான்'—யாவன்? யாருக்காக? எங்ஙனம் தூது நடந்தான்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

31

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

*"மருவார்வண் தாரான் மணிமுடியான் செய்த
அருள்தான் அறியாதார் இல்லை ;—தெருளா
அழிகொடா வாறே அடுகளிற்றாற்(கு) ஆகில்
பழிகள்தாம் சாலப் பல. 1

(மரு - மணம். தாரான், முடியான் - துரியோதனன். தெருளா - தெரிந்து. அழிகொடாவாறு - (போரில்) அழியாத விதமாக. அடுதல் - கொல்லுதல். அடு களிற்றான் - தருமன்)

* பாரத வெண்பா—கன்னன் நன்றியுரை.
ஆசிரியர் : பெருந்தேவனார்.

"மதமா மழகளிற்றான் மற்றெனக்குச் செய்த
உதவி உலகறியும் அன்றே? — உதவிதனை
நன்றுசெய்தோர் தங்களுக்கு நானிலத்தில்
குன்றுவரோ செய்ந்நன்றி? கூறு. [நல்லோர்கள் 2

(மழ களிறு - இளமையுடைய யானை. மழகளிற்றான் - துரியோதனன். குன்றுதல் - குறைதல்.)

"மைத்தடங்கண் மாதேவி வார்துகிலை யான்பிடிக்க
அற்று விழுந்த அருமணிகள்; — மற்றவற்றைக்
'கோக்கேனோ!' என்றுரைத்த கொற்றவற்(கு)என்
போக்கேனோ வெஞ்சமத்துப் புக்கு. [ஆருயிரைப் 3

(மாதேவி - பெருந்தேவி; துரியோதனன் மனைவி. கொற்றவன் - துரியோதனன். வெஞ்சமம் - கொடிய போர்.)

"உந்தபது புத்திரர்க்கா நல்லீராய் வந்தீர்நீர்;
இன்றென்பேல் ஆசை இலையுமக்கு; — அன்று
வடுவஞ்சிப் போவிட்டீர்; மாண்டேனேல் இன்று
'நட'வென்பீர் யாரை நயந்து? 4

(வடு - பழி. போவிட்டீர் - போக்கிவிட்டீர். நட - பாண்டவரைச் சேர நட.)

"நன்றாக மன்னன் எனக்கிந்த நாடறியக்
குன்றாத நன்மை பலகொடுத்தான்; — என்றாலும்
ஈண்டவன் செய்த உதவியினை யான்மறந்தால்
ஈண்டுவளோ தாமரையாள் சேர்ந்து?"

(மன்னன் - துரியோதனன். தாமரையாள் - திருமகள்.)

கேள்விகள் :—

1 கன்னன் 'செய்ந்நன்றி'யைப்பற்றி யாது கூறினான்?

2. துரியோதனனது நட்பை எந்த உதாரணத்தால் பாராட்டினான்?

3. கன்னன் குந்திமீது சுமத்திய குற்றம் யாது?
4. தாமரையாள் யார்? அவள் யாரை, ஏன் தீண்டாள் என்று கன்னன் கூறினன்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

32

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* தன்பெரும் செல்வம் எல்லாம்
மருமகன் தனக்கே யாக்கி

அன்புகொள் மனைவி யோடும்
அருந்தவ நெறியிற் சென்றான்;

பின்(பு)அவன் வாவு தாழ்ப்ப,
மருமகன் பெற்ற எல்லாம்

வன்பினால் வழக்குப் பேசி
வௌவினார் தாய மாக்கள். 1

(வன்பு - வல்லமை. தாயமாக்கள் - பங்காளிகள். வௌவினார் - கொள்ளை கொண்டார்.)

விளைநிலன் அடிமை பைம்பூண்
வெறுக்கைநன் பசுக்கள் ஏனை

வளனு(ம்)மற் றவர்கைக் கொள்ள,
வன்சிறை இழந்த புட்போல்

தளர்வுறு மகனும் தாயும்
சார்(பு) இலாத் தம்ம னோர்க்(கு)ஓர்

---

* திருவிளையாட்ற் புராணம்—மாமனாக வந்து வழக்குரைத்த படலம். தாயின் புலம்பல்.
ஆசிரியர் : பரஞ்சோதி முனிவர்.

களைகணாய் இருக்குங் கூடல்
கடவுளே சரணம் என்னு. 2

(அடிமை - அடிமையாகப் பெற்ற மக்கள். சிறை - சிறகு. சார்பு - பற்றுக்கோடு. களைகண் - பற்றுக்கோடு. கூடல் - மதுரை.)

"என்மகன் தன்னை மைந்தன்
இன்மையால், எவருங் காணத்
தன்மக னாகக் கொண்டு
தகுதியால் அன்றே காணி
பொன்மனை பிறவு நல்கிப்
போயினான் எம்முன் ; இப்பால்
வன்மையால் தாயத் தார்கள்
அவைஎலாம் வௌவிக் கொண்டார். 3

"ஒருத்திநான் ; ஒருத்திக்(கு) இந்த
ஒருமகன் ; இவனும் தேறும்
கருத்திலாச் சிறியன் ; வேறு
களைகணுங் காணேன் ; ஐய !
அருத்திசால் அறவோர் தேறும்
அருட்பெருங் கடலே ! எங்கும்
இருத்திநீ அறியாய் கொல்லோ ?''
என்றுபார் படிய வீழ்ந்தாள்.

(அருத்தி - அன்பு.)

கேள்விகள் :—

1. வணிகள் என்ன செய்துவிட்டுத் தவநெறியிற் சென்றான் ?
2. தாயமாக்கள் என்ன செய்தனர் ?
3. மாற்றார் கைக்கொண்டவை எவை ?
4. வன்சிறை இழந்த புள்போல்—இதற்கு உபமேயம் என்ன ?

5. தாய் கூடற்பிரானிடம் யாது கூறி முறையிட்டாள்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

33

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* தன்உயிர்க் கன்று வீயத்
தளர்ந்தஆ தரியா தாகி,

முன்நெருப்(பு) உயிர்த்து விம்மி
முகத்தினிற் கண்ணீர் வார,

மன்உயிர் காக்கும் செங்கோன்
மனுவின்பொன் கோயில் வாயில்

பொன்அணி மணியைச் சென்று
கோட்டினால் புடைத்த(து) அன்றே. 1

(வீய - இறக்க. தரியாது-நிலைத்து இராமல். உயிர்த்து-பெருமூச்சு விட்டு. கோடு - கொம்பு. புடைத்தல் - அடித்தல்.)

ஆங்கது கேட்ட வேந்தன்
அரியணை இழிந்து போந்து

பூங்கொடி வாயில் நண்ணக்,
காவலர் எதிரே போற்றி,

"ஈங்(கு)இதோர் பசுவந்(து) எய்தி
இறைவ! நின் கொற்ற வாயில்

---

* பெரிய புராணம் — பசுவின் துயரம்.
ஆசிரியர் : சேக்கிழார்.

தூங்கிய மணியைக் கோட்டால்
துளக்கிய(து)" என்று சொன்னார். 2

(போற்றி - வணங்கி, கொற்றம் - வெற்றி. தூங்கிய - கட்டியுள்ள. துளக்கியது - அசைத்தது.)

மன்னவன் அதனைக் கேளா,
வருந்திய பசுவை நோக்கி,

"என் இதற்(கு) உற்ற(து)?" என்பான்
அமைச்சரை இகழ்ந்து நோக்க,

முன்னுற நிகழ்ந்த எல்லாம்
அறிந்துளான் முதிர்ந்த கேள்வித்

தொன்னெறி அமைச்சன் மன்னன்
தாளிணை தொழுது சொல்வான்: 3

(கேளா - கேட்டு. தாளிணை - இரண்டு பாதங்களையும்.)

"வளவ! நின் புதல்வன் ஆங்கோர்
மணிநெடுந் தேர்மேல் ஏறி,

அளவில்தேர்த் தானை சூழ,
அர(சு) உலாந் தெருவிற் போங்கால்,

இளைய ஆன் கன்று தேர்க்கால்
இடைப்புகுந்(து) இறந்த தாகத்

தளர்வுறும் இத்தாய் வந்து
விளைத்ததித் தன்மை" என்றான். 4

(வளவ - சோழ. தானை - சேனை. ஆன் - பசு. தளர்வுறும் - வருந்துகின்ற.)

கேள்விகள் :—

1. ஆவின் துயரம் யாது?
2. அஃது என்ன துன்பததை அடைந்தது?
3. அது யாது செய்தது?
4. காவலர் காவலனிடம் யாது சொன்னார்?

5. அரசன் ஆவினைக் கண்டதும் அமைச்சரை யாது கேட்டான் ?
6. தொன்னெறி அமைச்சன் எத்தகையவன் ?
7. அவன் யாது கூறினன் ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

34

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* "மக்களுக்(கு) இரங்கி வாடும்
மடத்தகை அணங்கு, கேட்டி :
தக்கமுற் பவத்தில் ஆன்ற
தரும(ம்)நன்(கு) இயற்றி னோர்கள்
ஒக்கஇப் பவத்தில் இன்பம்
ஒருங்(கு) அனு பவிப்ப(ர்) ; இன்றேல்
மிக்கவெம் துயரத்(து) ஆழ்வர் ;
இதற்(கு)உளம் மெலிதல் என்னே ! 1

(அணங்கு - பெண் தெய்வம் போன்றவள். கேட்டி - கேட்பாயாக. முற்பவம்-முற்பிறவி. ஆன்ற-பொருந்திய.)

"மைந்தர்கள் தம்மைப் போற்ற
வளநிதி வேண்டும் என்றாய் ;
நந்திய பறவை கானம்
நயந்(து)உறை விலங்கு முன்னா
அந்தப்பல் உயிர்க்குச் சேம
வைப்(பு)உண்டோ ? வருவாய் உண்டோ ?

---

* குசேல உபாக்கியானம்—குசேலன், மனைவிக்கு நல்லறிவு புகட்டல்.

ஆசிரியர் : தேவராஜப் பிள்ளை

எந்திடத் தேனும் போய்ஒன்(று)
இரப்பது தானும் உண்டோ? 2

(வளநிதி - மிக்க செல்வம். நந்திய - பெருகிய. முன்னு- முதலிய. சேம வைப்பு - சேர்த்து வைக்கப்பட்ட பொருள். இரத்தல் - யாசித்தல்.)

"அல்லது 'நாளைக்(கு) என்செய்
வா(ம்)'எனுங் கவலை உண்டோ?
எல்லையில் ஒன்றி னுல்ஒன்(று)
இடிப்(பு)உண்டு வாழ்தல் உண்டோ?
ஒல்லு(ம்)அவ் வுயிர்கள் தம்முள்
உணவிலா(து) இறந்த(து) உண்டோ?
சொல்,அரி பரந்த உண்கண்
துடியிடைப் பேதை மாதே! 3

(இடிப்புஉண்டு - நெருக்கப்பட்டு. அரிபரந்த - சிவந்த கோடுகள் படர்ந்துள்ள. உண்கண் - மையுண்ட கண்.)

"கல்லினுட் சிறுதே ரைக்கும்
கருப்பைஅண் டத்து (உ)யிர்க்கும்
புல்உண(வு) அளித்துக் காக்கும்
புனத்துழாய்க் கண்ணி அண்ணல்
ஒல்லு(ம்)நின் மைந்தர்க் காவா(து)
ஒழிவனோ? ஒழியான் உண்மை;
மெல்லியல் கொண்ட துன்பம்
விடுவிடு; மறந்தும் எண்ணல். 4

(கருப்பை - கருப்பையாகிய. புல்உணவு - சிறு உணவு. காவாது ஒழிவனோ - காப்பாற்றுமல் நீங்குவானே?)

"ஆதலின், நினது மைந்தர்க்(கு)
ஆயுள்உள் ளளவை கூறும்
ஓதிரு வினைக்குத் தக்க
உண(வு)உண்டு; புந்தி மாழ்கேல்;

ஏதுவந் தாலும் ஊழால்
எனநினைந்(து) இருத்தல் வேண்டும்;
மாதர்வாண் முத்தம் மூரல்
மயில்மருள் நடைப்பூங் கொம்பே!"

(புந்தி - புத்தி. மாழ்கேல் - அழியாதே. மாதர் - விரும்பத்தக்க. வாள் - ஒளி பொருந்திய. முத்தம் மூரல்- முத்தைப்போன்ற பல்.)

கேள்விகள் :—

1, இன்பம அனுபவிப்பவர் யார்? துயரத்து ஆழ்பவர் யார்?
2. 'வளநிதி வேண்டும்' என்றது யார்? எதற்காக?
3. 'வளநிதி வேண்டா' என்பதற்குக் கூறப்பட்ட நியாயங்கள் எவை?
4, 'புனத்துழாய்க் கண்ணி அண்ணல்' என்ன செய்கிறான்?
5. அவன் எதனைச் செய்யத் தவறான்?
6. 'ஆதலின்' என்று தொடங்கி முனிவன் தன் மனையாளை நோக்கிக் கூறியது யாது?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

35

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக:—

* வளமலி இந்நகர் மன்னன் மன்னவன்
தளைஅவிழ் நறுமலர்த் தண்ணந் தாரினான்

---

* நைடதம்—நளன் ஆட்சி.
ஆசிரியர் : அதிவீரராம பாண்டியன்.

கலைகணுய் உலகொரு மூன்றும் காத்தருள்
நளனெனப் பெயரிய நாம வேலினான். 1

(நகர் - (நிடதநாடு) விதர்ப்ப நகர். தலை - அரும்பின் கட்டு. கலை கண் - நுனபரீக்குவோன். நாமம் - அச்சம்.)

ஒன்னலர் மணிமுடி உரிஞ்சு தாளினான்;
கல்நவில் தோளினான்; கமலக் கண்ணினான்;
தன்உயி ராம்என உலகில் தங்கிய
மன்னுயி ரனைத்தையும் புரக்கும் மாட்சியான். 2

(ஒன்னலர் - பகைவர். உரிஞ்சு - உராய்தல் பொருந்திய. தாள் - கால்கள். கல்நவில் - கல் என்று சொல்லப்படும். புரத்தல் - காத்தல்.)

வெங்கலி இருள்கெட வெண்ணிலா உமிழ்
திங்களங் கவிகையான்; திகிரி ஒன்றினால்
அங்கண்மா நிலமுழு(து) அளிக்கும் ஆற்றலான்;
மங்குலின் எழுமடங்(கு) உதவும் வண்கையான். 3

(கலி இருள் - துன்பமாகிய இருள். கவிகை - கொடை. திகிரி - ஆணைச்சக்கரம். அளிக்கும் - காக்கும். மங்குல் - மேகம். வண்கை - வளப்பமிக்க கை.)

கேள்விகள் :—

1. நளன் எவ்வாறு நாட்டை ஆண்டான் ?
2. அவனது வெற்றிச் சிறப்பு யாது ?
3. அவனது 'கண்' எத்தகையது ? 'சொல்' எத்தகையது ?
4. அவனது கவிகையின் சிறப்பு யாது ?
5. அவனது ஈகைத்தன்மை எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நம் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

36

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

*'பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா ! அமரர் ஏறே !
ஆயர்தம் கொழுந்தே !' என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகர்உ ளானே. 1

(கமலம் - தாமரை. ஏறு - ஆண் சிங்கம்.)

கங்கையிற் புனித மாய
காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கந் தன்னுள்
எங்கள்மால் இறைவன் ஈசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன்
ஏழையேன் ஏழை யேனே. 2

மனத்திலோர் தூய்மை இல்லை ;
வாயிலோர் இன்சொல் இல்லை ;
சினத்தினால் செற்ற நோக்கித்
தீவிளி விளிவன் வாளா ;

---

* நாலாயிரம்—திருமாலை. திரு அரங்கத்தைப் பற்றிய பாடல். இதனைப் பாடியவர் : தொண்டர் அடிப்பொடி ஆழ்வார்.

புனத்துழாய் மாலை யானே!
பொன்னிசூழ் திருஅ ரங்கா!

எனக்(கு)இனிக் கதியென்? சொல்லாய்;
என்னை ஆ ளுடைய கோவே!

(துழாய் - துளசி. செற்ற-முறைத்து. வாளா - வீணுக. பொன்னி - காவிரி.)

கேள்விகள் :—

1. 'இச்சுவை'—எது? 'அச்சுவை'—எது?
2. 'திருமாலின் கிடக்கை' எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?
3. ஆழ்வாரிடம் காணப்பட்ட குறைபாடுகள் எவை?
4. அவர் இறைவனை யாது வேண்டுகிறார்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக :—

37

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினுக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

*மங்கையம் பருவம் வருதலும் அவளை
வழிபடு சேடியர் குறுகித்,

"திங்கள்வாள் நுதல்! நீ எழ்இரண் டாண்டில்
திருஇழந் திருக்குவை" என்ன,

அங்கவள் வெருவி அர்க்கிய வர்க்கி
ஆகிய முனிவரன் மனைவி

தங்கிய சாலை சென்றவள் தொழுது
தன்உறு துயர்நிலை சொன்னுள். 1

(வாள் - ஒளி. திரு - சுமங்கலிச் செல்வம். வெருவி - அஞ்சி.)

---

* பிரமோத்தர கர்ண்டம்—சோமவார விரதச் சிறப்பு. ஆசிரியர்: வரதுங்க ராம பாண்டியன்.

"புரிகுழல் அணங்கே! சோமவா ரத்தில்
புனிதநீர் இனிதுடன் ஆடிப்

பரிவுடன் உணவு முதலிய துறந்து
மோனமாய்ப் பவித்திரை ஆகித்

தெரிமலர் கொணர்ந்து பரமனோ டுமையைச்
சிவாகம விதிமுறை வழுவா(து)

உரியபூ சனைசெய்(து) அருமறை யவர்க்கும்
உவப்புடன் அன்னமும் அளித்தே." 2

(புரிகுழல் - வளைந்த கூந்தல். மோனம்ஆய் - பேசாதிருந்து. பவித்திரை - தூய்மையுடையவள்.)

"இன்னணம் அரனை ஏத்திநீ வழிபட்(டு),
'ஈசனே! என்உறு துணையே!

உன்னுடை அருளே வேண்டுவன்' என்ன
உரைத்துநல் விரதமும் முடித்தால்,

மன்னிய விரதம் தரும்பெரு நலத்தால்
மாதுநின் கணவனுக் குரிய

தன்னுடை ஞாலம் அல்லது வேண்டும்
தாரதலம் அளவில உளவாம்." 3

(இன்னணம் - இவ்வாறு. ஞாலம் - உலகம்.)

கேள்விகள் :—

1. சேடியர் தலைவியைக் குறுகி யாது கூறினர்?
2. தலைவி தன் குறையை யாரிடம் முறையிட்டாள்?
3. சோமவார விரதம் இருக்கத் தக்க முறை யாது?
4. அதனால் தலைவிக்கு என்ன நன்மை உண்டாகும்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

38

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—
(கன்னன்)

*" அங்கிருந்து 'சயத்திரதன் ஆவிகவர்ந்
திடுவலெ'ன ஆண்மை கூறிப்
பங்கிருந்த உமாபதிபாற் பணிந்துவரம்
பெறச்சென்றான் பார்த்த னாகில்,
கொங்(கு)இருந்த தாராய்!நின் குடைநிழல்கீழ்
இதுகாலம் கூட்டங் கூடி
இங்கிருந்த ஏழையரேம் என்செயமற்(று)
இருக்கின்றேம்?" என்றும்சொன்னான். 1

(உமை பங்கிருந்த பதி-சிவன். பார்த்தன் - அர்ச்சுனன். கொங்கு - தேன். சொன்னான் - கன்னன் சொன்னான்.)

இவன்மொழிந்த இக(ழ்)உரைகேட்(டு) இடிம்பன்மரு
மகன் வெகுளுற்(று), "என்சொன் னாலும்
அவனிதலம் முழுதுமினி அரசாள
நினைந்திருந்தீர்? அறிவி லீர்காள்,
சிவ(ன்)எரி செய் புரம்போலும் பாடிவீ(டு)
அழ(ல்)ஊட்டிச் சேனை யாவும்
பவனன்மகன் மக(ன்)என்னும் பரி(சு)அறியத்
தொலைத்(து)ஈடு படுத்து வேனே. 2

(இவன் - கன்னன். இடிம்பன் மருமகன் - கடோற்கசன். வெகுள் உற்று - கோபம் அடைந்து. அவனி-பூமி. பாடி வீடு - படை தங்கும் இடம். அழல் - நெருப்பு. பவனன் மகன் மகன் - காற்றின் மகனான பீமன் மகனான கடோற்கசன். பரிசு - தன்மை.)

---

* வில்லி பாரதம்—கடோற்கசன் தூது.
ஆசிரியர் : வில்லிபுத்தூரார்.

"தசைகுருதி நிண(ம்)ஒழுகத் தனித்தனியே
எதிர்த்தவரைத் தலைகள் சிந்த
விசையன்வர வேண்டுமோ? மற்றுள்ளார்
திரண்டுவர வேண்டு மோதான்?
நிசைபுலரும் முனம்முனைந்து நீறுக்கி
விடுகுவ(ன்); எம் நிருபன் சொன்ன
வசைவின்மொழி மறுத்(து)உடற்றல் ஆகா(து)என்(று)
இருக்கின்றேன், அறிகிலீரே. 3

(குருதி - இரத்தம். தசை - நடை. நிணம் - கொழுப்பு. விசயன் - அர்ச்சுனன். நிசை - இரவு. நீறு - சாம்பல். நிருபன் - அரசன்; தருமன். உடற்றல் - போர்செய்தல்.)

"இருவ(ர்)எதி(ர்) எதிர்தம்மில் இகல்பொருதல்
உல(கு)இயற்கை; யாரும் கூடிப்
பருவமுறுத் தனிக்குதலைப் பாலகனுக்(கு)
ஆற்றுமல் பறந்து போனீர்;
ஒருவ(ன்)நெடுந் தே(ர்)அழிக்க, ஒருவன்மலர்க்
கைதுணிக்க, ஒருவன் பின்னைப்
பொருவன்என அறைகூவிப் பொன்றுவித்தான்;
இதுகொண்டோ புகல்கின் றீரே?" 4

(இகல் - மாறுபாட்டினல். குதலை - சிறுவன். அறைகூவி - உறுதி கூறி. பொன்றுவித்தான் - அழித்தான்.)

கேள்விகள் :—

1. பார்த்தன் கூறிய 'ஆண்மை'யுரை யாது?
2. அவன யாரிடம் வரம்பெறச் சென்றுன்? எதற்காக?
3. கன்னன் கூறிய 'இகழுரை' யாது?
4. கடோற்கசன் "அறிவிலீர்காள்!" என்று ஏன் அழைத்தான்? யாரை அழைத்தான்?
5. அவன் தன் ஆற்றலை எங்ஙனம் பாராட்டிக் கூறினன்?

6. உலகியற்கை எது ?

7. அதற்கு மாருக நடந்தவை எவை ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

39

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினக்கட்டு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* கறுத்த மாமுனி கருத்தை உன்னி, "நீ
பொறுத்தி" என்றவன் புகன்று, "நின்மகற்(கு)
உறுத்த லாகலா உறுதி எய்துநாள்
மறுத்தி யோ ?" என வசிட்டன் கூறினன். 1

(கறுத்த – கோபித்த. மாமுனி - விஸ்வாமித்திரன். உறுத்தலாகலா - வந்து அடைய முடியாத. உறுதி - நன்மை.)

"பெய்யும் மாரியாற் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகும் ஆறுபோல்,
ஐய, நின்மகற்(கு) அளவில் விஞ்சைவந்(து)
எய்து கால(ம்)இன்(று) எதிர்ந்த(து)" என்னவே. 2

(மொய் - வலிமை. வேலை-கடல். முடுகும் - விரைந்து செல்லும். விஞ்சை - வித்தை. எதிர்ந்தது - அடைந்தது.)

குருவின் வாசகம் கொண்டு கொற்றவன்,
"திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்(று)" என,
"வருக" என்றனன் ; என்ன லோடும்வந்(து)
அருகு சார்ந்தனன் அறிவின் உம்பரான். 3

(குரு - வசிட்டன். கொற்றவன் - தயரதன். திருவின் கேள்வன் - இராமன். அருகு - சமீபம். உம்பரான் - தேவர் தலைவன்.)

---

* கம்ப ராமாயணம்—தசரதன் இராம இலக்குமணரை விஸ்வாமித்திரரிடம் ஒப்படைத்தல்.

ஆசிரியர் : கம்பர்.

வந்த நம்பியைத் தம்பி தன்னொடும்
முந்தை நான்மறை முனிக்குக் காட்டி, " நல்
தந்தை நீ, தனித் தாயும்நீ, இவர்க்கு ;
எந்தை, தந்தனன் ; இயைந்த செய்கெ"ன்றான். 4

(முனி - விஸ்வாமித்திரன். தனித் தாய்-ஒப்பற்ற தாய். தந்தனன் - தந்தேன்.)

கொடுத்த மைந்தரைக் கொண்டு சிந்தைமுந்(து)
எடுத்த சீற்றம்விட்(டு) இனிது வாழ்த்தி, " மேல்
அடுத்த வேள்விபோய் முடித்தும் நாம்"என
நடத்தல் மேயினான் நவைக்கண் நீங்கினான். 5

(நவை - குற்றம். நீங்கினான் - விஸ்வாமித்திரன்.)

கேள்விகள் :—

1, கறுத்த மாமுனி யாவன் ?
2. அவனைப் பார்த்து வசிட்டன் யாது கூறினான் ?
3. வசிட்டன் தசரதனை நோக்கிக் கூறியது யாது ?
4 வசிட்டன் உவமை முகத்தால் விளக்கியது யாது ?
5. குரு - யாவன் ? அவன் 'வாசகம்' யாது ?
6. 'திருவின் கேள்வன்' - எவன் ? அவனைத் தசரதன் ஏன் வரவழைத்தான் ?
7. 'நம்பி, தம்பி' - யாவர் ? அவர்களை முனிக்குக் காட்டித் தசரதன் யாது கூறினான் ?
8. தசரதன் மக்களைக் கொடுக்கப், பெற்ற முனிவன் நிலை யாது ?
9. அவன் அவர்களைப் பார்த்து யாது கூறினான் ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

40

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* 'இம்பர்வான் எல்லையிரா மனையே பாடி
என்கொணர்ந்தாய்? பாணா,நீ' என்றாள் பாணி.

வம்பதாங் 'களபமெ'ன்றேன்; 'பூசும்' என்றாள்.
'மாதங்கம்' என்றேன்யான்; 'வாழ்ந்தோம்'
என்றாள்.

'பம்புசீர் வேழமெ'ன்றேன்; 'தின்னும்' என்றாள்.
'பகடெ'ன்றேன்; 'உழுமெ'ன்றாள் பழனந் தன்னை.

'கம்பமா' என்றேன்'நற் களியாம்' என்றாள்.
'கைம்மா'வென்; றேன்; சும்மாக் கலங்கினாளே.

(இம்பர் - இவ்வுலகம். எல்லை - புகழ்க்கு எல்லை. பாணி - பாணன் மனைவி. வம்பதுஆம் - புதியதாகிய. களபம் - சந்தனம் (யானை). மாதங்கம் - பொன் (யானை). பம்புசீர் - மிக்க சிறப்பு. வேழம் - கரும்பு (யானை). பகடு - எருது (யானை). பழனம் - வயல். கம்ப(ம்)மா - கம்பால் செய்த மாவு (கட்டுத் தறியையுடைய யானை). நல் களி ஆம் - நல்ல களி கிளறலாம். கைம்மா - கையையுடை விலங்கு; யானை. களபம், மாதங்கம், வேழம் முதலியன யானையின் வேறு பெயர்கள்.)

கேள்விகள் :—

1. பாணி, பாணனைப் பார்த்து என்ன கேட்டாள்?
2. பாணன் என்ன பதில் சொன்னான்?
3. அது கேட்ட பாணி என்ன சொன்னாள்? ஏன்?
4. பாணன் 'மாதங்கம்' என்றவுடன் பாணி என்ன பதில் கூறினாள்? ஏன்?

---

* தனிப்பாடல்கள்—பாணன், பாணி உரையாடல்.
ஆசிரியர் : அந்தகக் கவி வீரராகவ முதலியார்.

5. பிறகு பாணன் என்ன சொன்னான்?
6. பாணி அதனைத் 'தின்னும்' என்றாள்.—ஏன்?
7. பாணி 'உழும்' என்றாள்.—என்ன காரணம்?
8. பாணன் அதற்கு என்ன சொன்னான்?
9. பாணி தந்த மறுமொழி யாது?
10. பாணி 'கலங்கினாள்'.—என்ன காரணம்?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

41

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக:—

* பாலாறு குசைத்தலை பொன்முகரிப்
பழைஆறு படர்ந்(து)எழு கொல்லியெனும்
காலாறும் அகன்(று)ஒரு பெண்ணையெனும்
நதியாறு கடந்து நடந்தனனே. 1

(நடந்தவன் கருணாகரத் தொண்டைமான்.)

கோதா வரிநதி மேலா றொடுகுளிர்
பம்பா நதியொடு சந்தப்பே
ரோதா வருந்தி ஒருகோ தமையுடன்
ஒலிநீர் மலிதுறை பிறகாக. 2

கடையிற் புடைபெயர் கட(ல்)ஒத்(து) அரசர்
கலங்கும் பரிசு கலிங்கம்புக்(கு)
அடையப் படர்எரி கொளுவிப் பதிகளை
அழியச் சூறைகொள் பொழுதத்தே. 3

(கடையில் - மந்திர மலையால் கடைகின்ற காலத்து. பரிசு - தன்மை. சூறை - கொள்ளை.)

---

* கலிங்கத்துப் பரணி - படை எழுச்சி.
ஆசிரியர்: ஜயங்கொண்டார்.

" கங்கா நதிஒரு புறமா கப்படை
கடல்போல் வந்தது ; கடல்வந்தா(ல்)

எங்கே புகலிடம்? எங்கே இனிஅரண்?
யாதோ இதுஇது விதி!'"யென்றே. 4

(புகலிடம் - துன்பக் காலத்தில் அடைக்கலம் புகும் இடம். அரண் - பாதுகாவலன இடம்.)

" இடிகின் றனமதில் ; எரிகின் றனபதி ;
எழுகின் றனபுகை ; பொழில்எல்லாம்

மடிகின் றன ;குடி கெடுகின் றனம்;இனி
வளைகின் றனபடை பகையன்றே. 5

" உலகுக்(கு) ஒருமுதல் அபயற்(கு) இடுதிறை
உரைதப் பிய(து),எம(து) அரசே, எம்

பலகற் பனைகளை நினைவுற் றிலை ;வரு
படைமற் றவன்விடு படை"யென்றே. 6

(அபயன் - சோழன். திறை - வரி. கற்பனை - புத்திமதி.)

உரையிற் குழறியும் உடலிற் பதறியும்
ஒருவர்க்(கு) ஒருவர்முன் முறையிட்டே

அரையில் துகில்விழ அடையச் சனபதி
அடியிற் புகவிழு பொழுதத்தே. 7

(அரை - இடை. துகில் - ஆடை. சனபதி - மக்கள் தலைவன் ; அரசன்.)

கேள்விகள் :—

1. கலிங்கம் புகுந்த படை எந்தெந்த ஆறுகளைக் கடந்து சென்றது?
2. கலிங்க நாட்டிற் புகுந்த படை என்ன செய்தது?
3. கங்கையாறு கூறப்பெற்ற சந்தர்ப்பம் யாது?
4. கலிங்க மக்கள் யாது கூறிப் புலம்பினர்?
5. குடிகள் அரசனை நோக்கி யாது கூறி முறையிட்டனர்?

6. மக்கள் எந்நிலையில் அரசனிடம் சென்று முறையிட்டனர்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

42

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக:—

*'வாருநீர் யார்' என்ன, 'வித்துவான்' என்னவும்,
மதிமோசம் வந்த தென்றே
வாய்குளறி மெய்யெலாம் மிகநடுக் குற்று,'நீர்
வந்தகா ரியமேதெ'னச்,
'சீருலா வியகாம தேனுவே! தாருவே!
சிந்தா மணிக்கு நிகரே!
செப்புவச னத்தரிச் சந்த்ரனே!' என்னலும்,
சினந்திரு கணுஞ்சி வந்தே,
'யாரைநீ மாடுகல் மரமென்று சொன்னதும்
அலால்,அரிச் சந்த்ரன் என்றே
அடாதசொற் சொன்னையே? யார்க்கடிமை ஆகினேன்?
யார்கையிற் பெண்டு விற்றேன்?
தீருமோ இந்தவசை?' என்றுரைசெய் வெகுகொடிய
தீயரைப் பாடி நொந்தேன்;
திருமன்றுள் நடுநின்று நடமொன்று புரிகின்ற
தென்தில்லை நடரா சனே!

(சீர் - சிறப்பு. உலாவிய - பொருந்திய. காமதேனு- வேண்டுபவர்க்கு வேண்டுவன தரும் தெய்வப் பசு. தாரு - கற்பக மரம். சிந்தாமணி - சிறந்த மணி. வசனம் - சொல்

---

* தனிப்பாடல்—அறிவிலார் தன்மை.
ஆசிரியர் : சரவணப்பெருமாள்.

உறுதி ; சத்தியம். மாடு - (காமதேனு ஆகிய) மாடு. கல் - (சிந்தாமணி ஆகிய) கல். மரம் - (கற்பமாகிய) மரம். பெண்டு - பெண். வசை - குற்றமொழி. மன்று - பொது இடம் ; பொன் அம்பலம்.)

கேள்விகள்:—

1. நடராசன் சிறப்பு யாது?
2. 'வித்துவான்' என்றதும் பணக்காரர் என்ன பாடு பட்டார்?
3. அவர் என்ன கேள்வியைக் கேட்டார்?
4. புலவர் அவரை எவ்வாறு பாராட்டினார்?
5. அப்பாராட்டுரைக்குப் பணக்காரர் சினந்து யாது கூறினார்?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

43

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* இந்திரன் கலையாய் என்மருங் கிருந்தான் ;
அக்கினி யுதரம்விட் டகலான் ;

எமனெனைக் கருதான் அரனெனக் கருதி ;
நிருதிவந் தென்னையென் செய்வான் ?

அந்தமாம் வருணன் இருகண்விட் டகலான் ;
அகத்துறு மக்களும் யானும்

அனிலம தாகும் அமுதினைக் கொள்வோம் ;
யாரெனை யுலகினில் ஒப்பார் ?

சந்ததம் இந்த வரிசையைப் பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்

* தனிப்பாடல்கள்—வறுமையின் கொடுமை.
ஆசிரியர் : காளமேகப் புலவர்.

தலைசெயு மென்னை, நிலைசெய்கல் யாணிச்
சாளுவத் திருமலை ராயன்

மந்தர புயனுங் கோப்பய னுதவு
மகிபதி விதரண ராமன்

வாக்கினுற் குபேர னுக்கினு னவனே
மாசிலா ஈசனு வானே.

(கலை - ஆடை. மருங்கு - இடை. ஆடை இந்திரனைப் போல் பலகண் (துவாரங்)களை உடையது. அக்கினி - பசித்தீ. உதரம் - வயிறு. அரன் - சிவன்; பிச்சை எடுத்தலால் அரன் என்று நினைத்தான் யமன். நிருதி - அரக்கன்; மாமிசம் உண்போன். (எலும்பாய் வாடி இருப்பதால் 'அரக்கன் என்ன செய்வான்' என்றார்). அனிலம் - காற்று. சந்ததம் - எந்நாளும். வரிசையை - சிறப்பை. தலைசெய்யும் - அவனால் தலைமை பெற்றிருக்கும். மந்தரபுயன் - மந்தரமலை போலும் தோளை யுடையவன். விதரண ராமன் - அழகு முதலிய நற்பண்புகளும் இரமிக்கும் செயலும் உடையவன்.)

கேள்விகள் :—

1. புலவருக்கு ஆடை எவன்? ஏன்?
2. வயிற்றை விட்டு நீங்காதவன் எவன்? ஏன்?
3. 'எமன் எனைக் கருதான்'.—ஏன்?
4. 'நிருதி என்னை நெருங்கான்'—ஏன்?
5. 'வருணன் அகலான்.'—எதனை விட்டு? ஏன்?
6. புலவரும் மக்களும் கொள்ளும் உணவு யாது?
7. 'யார் எனை உலகினில் ஒப்பார்?'—ஏன் ஒவ்வார்?
8. புலவர் சந்ததமும் யாரை வணங்கிவந்தார்?
9. புலவரை ஆட்கொண்ட வள்ளல் யார்?
10. அவ்வள்ளலது சிறப்பு யாது?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நம் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

44

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* மருதிடங் கொண்ட மருத வாண !
நின்னது குற்றம் உளதோ ! நின்நினைந்(து)
எண்ணருங் கோடி இடர்ப்பகை கடந்து,
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா,
இறப்பையும் பிறப்பையும் இகழ்ந்து, சிறப்பொடு
தேவ ராவின் கன்றெனத் திரியாப்
பாவிகள் தமதே பாவம் ; யாதெனில்,
முறியாப் புழுக்கல் முப்பழம் கலந்த
அறுசுவை அடிசில் அட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துதல்
அயினியின் குற்றம் அன்று ; வெயிலின்வைத்
தாற்றிய தெள்நீர் நாற்றம்இட் டிருப்ப
மடாஅ ஒருவன் விடாஅ வேட்கை
தெள்நீர் குற்றம் அன்று ;கண் அகன்று
தேந்துளி சிதறிப் பூந்துணர்த் துறுமி
வாலுகம் கிடந்த சோலை கிடப்ப,
வெள்இடை வெயிலில் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்த் திடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் நிழல்தீங் கன்றே.

(மருது - மருதமரம். இடர்ப்பகை-துன்பமாகிய பகை. காலன் - யமன். முறிதல் - உடைதல். புழுக்கல்-சோறு. அடிசில் - உணவு. அட்டு - சமைத்து. அயினி - சோறு. நாற்றம் - வாசனைப் பொருள்கள். விடாஅ வேட்கை - தணியாத நீர்ஆசை. மடாஅ - உண்ணாது. துணர் - கொத்து. துறுமி - நிறைந்து. வாலுகம் - வெண்மணல். வெயர் பொடிப்ப - வியர்வை தோன்ற.)

---

* திருவிடைமருதூர் மும்மணிக் கோவை—இறைவன் பெருமையும் மக்களின் அறியாமையும்.

ஆசிரியர் : பட்டினத்தடிகள்.

கேள்விகள் :—

1. தேவராவின் கன்று என்னென்ன செய்யக்கூடும் ?
2. தேவராவின் கன்றெனத் திரியாதவர் யார் ?
3. அவர்கள் குற்றம் யாது ?
4. ‘ அயினியின் குற்றமன்று.’—எது ? எப்படி ?
5. ‘ தெள்நீர்க் குற்றமன்று.’—எது ? எப்படி ?
6. ‘ நிழல் திங்கன்று.’—எது ? எப்படி ?
7. மருதவாணன் யார் ?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

45

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிசிற(கு)
அன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிந்திடு மாற்றம்,
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்(கு)
ஒருமையின் உரிமையின் உதவி, அணிதிகழ்
குருமா மணிதிகழ் குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்கும் சேரலன், காண்க :
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் ; தன்பால்
காண்பது கருதிப் போந்தனன் ;
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

(மதி மலி புரிசை - சந்திரன் தவழும் மதில். பயில் - வாழ்கின்ற. ஆலவாய் - மதுரை. மாற்றம் - சொற்கள். பருவக் கொண்மூப் படியென - கார்காலத்து மேகம் போல.

---

* தனிப்பாடல்கள்—சேரனுக்குக் கடிதம்.
ஆசிரியர் : மதுரைச் சொக்கநாதர்.

ஒருமையின் - மனம் ஒன்றுபட்டு (இசைந்து). உரிமையின் - அவரவர்க்குத் தக்கபடி. குரு-நல்லநிறம். செருமா - போரிற் சிறந்த யானை. உகைக்கும் - செலுத்தும். பண்பால் - பண்ணின் பகுதியறிந்த. தன்போல் - உன்னைப் போலவே. தன்பால்-உன்னிடம். மாண்பொருள்-நிறைந்த பொருள்.)

கேள்விகள் :—

1. கூடல் நகரம் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது ?
2. அன்னப்பறவை " " ?
3. இப்பாசுரம் விடுத்தவன் எவன் ? அவன் உறையும் இடம் எது ?
4. சேரலன் எதுபோலப் பிறர்க்கு உதவினன் ?
5. சேரலனது பிற சிறப்பு யாது ?
6. பாணபத்திரன் தொழில் யாது ?
7. அவன் எப்படிப்பட்டவன் ?
8. அவன் சேரநாடு சென்றதேன் ?
9. பாசுர ஆசிரியன் சேரனுக்கு விடுக்கும் ஆணை யாது ?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நம் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுது.

46

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* நாராய் நாராய் ! செங்கால் நாராய் !
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய் !
நீயுநின் மனைவியும்

---

* தனிப்பாடல்கள் :—நாரைவிடுதூது.
ஆசிரியர் : சத்திமுற்றப் புலவர்.

தென்றிசைக் குமரி ஆடி வடதிசைக்
காவிரி ஆட எகுவி ராயினெம்
சத்தி முற்றத்து வாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லிப்
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்(டு), எம்
கோமான் வழுதி கூடல் மன்றத்து
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலே தழீஇ
அலகுதிர்ந் தன்ன பல்லின ளாகிப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே.

(பவளம் - பவளம் போலச் சிவந்த. குமரி - குமரி முனை. சத்தி முற்றம் - சோழ நாட்டில் உள்ள ஊர். நனை சுவர் - மழையால் நனைந்த சுவர். பல்லிப்பாடு - பல்லிச் சகுனம். வழுதி - பாண்டியன். மன்றம் - பொது இடம். வாடை - குளிர் காற்று. அலகு உதிர்ந்தன்ன பல்லினன் - அலகு உதிர்ந்தாற் போன்ற பற்பறை கொட்டுபவன். பேழை - பெட்டி. உயிர்க்கும் - மூச்சு விடும். எனும் - என்று சொல்லும்,)

கேள்விகள் :—

1. நாரையின் அலகு எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது ?
2. நாரை எங்கிருந்து எங்குச் செல்கிறது ?
3. புலவர் மனைவி என்ன செய்துகொண்டிருப்பாள் ?
4. 'ஏழையாளன்' எங்ஙனம் இருக்கின்றான் ?
5. இச்செய்யுளுக்கு என்ன 'தலைப்பு'த் தரலாம் ?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நம் சொற்களால் அமைத்துப் 15 வரிக்குள் எழுதுக.

47

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* 'ஈ'யென இரத்தல் இழிந்தன்(று); அதனெதிர்
'ஈயேன்' என்றல் அதனினு மிழிந்தன்று;
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன் றதனெதிர்
கொள்ளே னென்றல் அதனினு முயர்ந்தன்று;
தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணா ராகுப நீர்வேட் டோரே;
ஆவு மாவுஞ் சென்றுணக் கலங்கிச்
சேற்றொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கி னதர்பல வாகும்;
புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர்; அதனால்
புலவேன் வாழியர் ஓரி! விசும்பில்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே.

(இழிந்தன்று - இழிந்தது. உயர்தன்று – உயர்ந்தது. இமிழ் - ஒலிக்கும். உண்ணாராகுப - உண்ணமாட்டார். வேட்டோர் - விரும்பியோர். மாவும் - விலங்குகளும். மருங்கின் - இடத்தில். அதர் - (செல்லும்) வழி. அல்லதை - அல்லது. உள்ளி - தாம் பரிசில் பெறக் கருதி. புலவேன் - (நின்னை) வெறுக்கமாட்டேன். வாழியர் - வாழ்வாயாக. கருவி வானம் - மின்னல் முதலிய தொகுதியையுடைய மழை. வள்ளியோய் - வள்ளல் தன்மை உடையோய்.)

கேள்விகள் :—

1. இழிந்தது எது?
2. அதனினும் இழிந்தது எது?

---

* புறநானூறு—'ஓரி' வள்ளலின் கொடைச் சிறப்பு. பாடியவர் : கழைதின் யானையார்.

3. உயர்ந்தது எது?
4. அதனினும் உயர்ந்தது எது?
5. 'நீர் வேட்டோர் கடலை விரும்பார்'.—ஏன?
6. அவர் எதனை விரும்புவர்? ஏன்?
7. இரவலர் எவற்றைப் பழிப்பர்? யாரைப் பழியார்? ஏன்?
8. ஓரியின் கொடைச் சிறப்பு யாது?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

48

I. கீழ்க்காணும் செய்யுளைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக:—

* கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதில் மகளிர் ஆதல் தகுமே;
மேல்நாள் உற்ற செருவிற்(கு) இவள்தன்ஐ
யானை எறிந்து களத்தொழிந் தனனே;
நெருநல் உற்ற செருவிற்(கு) இவள்கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப்பட் டனனே;
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே.

(மூது இல் - பழமையாகிய மறக்குடி. செரு - போர். இவள் தன்ஐ - இவளுடைய தந்தை. களத்து ஒழிந்தனன் - போர்க்களத்து இறந்தான். நெருநல் - நேற்று. கொழுநன் - கணவன். பெருநிரை விலங்கி - மிக்க பசுக்கூட்டங்களை மீட்டு. ஆண்டு - அங்கே. பட்டனன் - இறந்தனன்.

---

* புறநானூறு—வீரத்தாய்.
ஆசிரியர்: ஒக்கூர் மாசாத்தியார்.

செருப்பறை - போர் முரசம். வெளிது - வெள்ளை ஆடை. உடீஇ-உடுத்து. பாறு மயிர் - விரிந்த மயிர். நீவி - தடவி. விடும் - அனுப்புவாள்.)

கேள்விகள் :—

1. 'இவள் தன்னை' செய்த செயல் யாது?
2. 'கொழுநன்' என்ன செய்தான்? யாதாயினன்?
3. 'இன்று' இவள் யாது செய்தாள்?
4. 'இவள்' யார்?
5. 'கெடுக சிந்தை, கடிதிவள் துணிவே'—இங்ஙனம் கூறப்பட்டதேன்?

II. மேற்கண்ட செய்யுளின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

49

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

*கரங்கள்மீச் சுமந்து செல்லும்
கதிர்மணி முடியன், கல்லும்

மரங்களும் உருக நோக்கும்
காதலன், கருணை வள்ளல்

இரங்கினன் நோக்குந் தோறும்
இருநிலத் திறைஞ்சு கின்றான்;

வரங்களின் வாரி அன்ன
தாளிணை வந்து வீழ்ந்தான். 1

(மீ - தலைமேல். கதிர் - ஒளிவிடும். மணி முடியன் - அழகிய முடியை உடையவன்; வீடணன். கருணை வள்ளல் -

---

* கம்ப ராமாயணம்—இராமன் விபீடணனை அடைக்கலமாக ஏற்றல்.

ஆசிரியர் : கம்பர்.

இராமன். இரங்கினன் நோக்குந்தோறும் - மனமிரங்கியவனாய்ப் பார்க்குந்தோறும். இரு - பெரிய. வாரி அன்ன - கடலை ஒத்த. இணை - இரண்டு.)

'அழிந்தது பிறவி' என்னும்
அகத்தியல் முகத்துக் காட்ட,
வழிந்தகண் ணீரின் மண்ணில்
மார்புற வணங்கி னானைப்,
பொழிந்ததோர் கருணை தன்னால்
புல்லினன் என்று தோன்ற,
"எழுந்தினி திருத்தி" என்று
மலர்க்கையால் இருக்கை ஈந்தான். 2

(அகத்து இயல் - உள்ளத்தின் தன்மையை. புல்லினன் - தழுவினன்; ஏற்றுக்கொண்டனன். இருத்தி - இருப்பாய். இருக்கை - இடம்.)

ஆழியான் அவனை நோக்கி
அருள்சுரந் துவகை தூண்ட,
"ஏழினோ டேழாய் நின்ற
உலகும்என் பெயரும் எந்நாள்
வாழுநாள் அன்று காறும்
வாள்எயிற் றரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே; தந்தேன்" என்றான். 3

(ஆழியான் - சக்கரத்தை உடைய ராமன். ஏழினோடு ஏழு - பதினான்கு. வாள் எயிறு - ஒளி பொருந்திய பற்கள்; வாள் போலும் கூரிய பற்கள்.)

கேள்விகள் :—

1. இராமனது திருவடிச் சிறப்பு யாது?
2. வீடணன் எந்த நிலையில் இராமன் தாளில் வீழ்ந்தான்?

3. வீடணன் என்ன எண்ணி, எவ்வாறு மண்ணில் பணிந்தான்?

4. பணிந்தவனை இராமன் எப்படி வரவேற்றான்?

5. ஆழியான் வீடணனை நோக்கி யாது கூறினான்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நம் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

50

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

*ஈன்றாளு மாய்எனக்(கு) எந்தையு
மாய்உடன் தோன்றினராய்

மூன்றாய் உலகம் படைத்(து)உகந்
தான்மனத்(து) உள்ளிருக்க

ஏன்றான் இமையவர்க்(கு) அன்பன்
திருப்பா திரிப்புலியூர்த்

தோன்றாத் துணையாய் இருந்தனன்
தன்அடி யோங்களுக்கே. 1

விடையான் விரும்பியென் உள்ளத்(து)
இருந்தான்; இனிநமக்கிங்(கு)

அடையா அவலம்; அருவினை
சாரா; நமனையஞ்சோம்;

---

* தேவாரம்—திருப்பாதிரிப் புலியூரில் உள்ள சிவனைப் பற்றியது.

ஆசிரியர்: அப்பர்.

புடையார் கமலத்(து) அயன்போல்
பவர்பா திரிப்புலியூர்

உடையான் அடியார் அடிஅடி
யோங்கட்(கு) அரிய(து)உண்டே? 2

(விடையான் - ரிஷப வாகனத்தை உடையவன். நமன் - கூற்றுவன். புடை - புறவிதழ்.)

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா!
உன்னடி என்மனத்தே

வழுவா(து) இருக்க வரந்தர
வேண்டு(ம்);இவ் வையகத்தே

தொழுவார்க்(கு) இரங்கி இருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்

செழுநீர் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே! 3

கேள்விகள் :—

1. 'இமையவர்க்கு அன்பன்' சிறப்பு யாது?
2. அவன் தன் அடியார்க்கு யார் யாராக இருக்கிறான்?
3. விடையான் விரும்பி உள்ளத்திருப்பதால் அடியார்க்கு உண்டாகும் நன்மை என்ன?
4. 'தீவண்ணன்' சிறப்பு யாது?
5. அவனை அடியவர் வேண்டும் வரம் யாது?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

51

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின் வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* செய்யகண் ணீர ரும்பச்
செறிமயிர் பொடிப்ப ஆதன்

கையகப் பட்ட தெய்வக்
கதிர்விடு மணியி(ன்) நாயேற்(கு)

ஐயன்வந் தகப்பட் டான்என்(று)
அணிஎயி(று) இலங்க நக்கு

மெய்யெலாம் மெய்யன் பாய
விடலைமற் றின்ன சொல்வான் : 1

(செய்ய - சிவந்த. செறிமயிர் - நிறைந்த மயிர். பொடிப்ப - எழுந்து நிற்க; இதனை மயிர்க் கூச்செறிதல் என்பர். ஆதன் - குற்றமுடையவன். அணிஎயிறு - அழகிய பற்கள். இலங்க - விளங்க. நக்கு - சிரித்து. விடலை - ஆண் களில் சிறந்தவன். இன்ன - இவை போல்வன.)

"யானையும் புலியும் எண்கும்
யாளியும் முளவும் கூர்ங்கோட்(டு)

ஏனமும் திரியுங் காட்டுள்
எந்தைநீ துணையு மின்றிக்

கூனல்வில் தடக்கை வேடர்
குலமென இருப்ப தென்ன ?

ஊனுண(வு) உனக்கி யாவர்
உண்கெனத் தருவர் ? அந்தோ ! 2

(எண்கு-கரடி. ஆளி - சிங்கம். முளவு-முள்ளம் பன்றி. கோடு - கொம்பு. ஏனம் - பன்றி. கூனல் - வளைந்த. வேடர்

---

* சோளத்திப் புராணம்—கண்ணப்பன் அன்பு.
ஆசிரியர் : சிவப்பிரகாச சுவாமிகள்.

ஞூலம் என - வேடர்கள் நகர மக்களோடு தொடர்பு இன்றி வாழ்தல் போலத் தனித்து. ஊன் - புலால். உனக்கு யாவர் என்பது உனக்கியாவர் என்ருயிற்று. அந்தோ - ஐயோ.)

"சாமிநீ தனியே யீண்டுத்
தங்குதல் தரித்தல் ஆற்றேன் ;
ஏமநல் உடுப்பூர்க் கின்னே
என்னெடு வருதல் வேண்டும் ;
நீமனம் இரங்காய், எந்தாய் !"
எனப்பல நிகழ்த்தி ஞன்அக்
கார்மழை யனையான் அற்புக்
கடலினுக் கெல்லை யுண்டோ ! 3

(ஈண்டு - இவ்விடம். தரித்தல் ஆற்றேன் - பொறுக்க மாட்டேன். ஏமம் - பாதுகாவல். உடுப்பூர் - கண்ணப்பன் ஊர். கார்மழை - கரிய மேகம். அன்புக்கடல் - அன்பாகிய கடல் ; உருவகம். எல்லை - அளவு.)

கேள்விகள் :—

1. லிங்கத்தைக் கண்டதும் திண்ணனுக்கு உண்டான மெய்ப்பாடுகள் எவை ?
2. அவன் யாது கூறி நக்கான் ?
3. 'மெய்யெலாம் மெய்யன்பு'—இதன் பொருள் யாது ?
4. காட்டில் திரியும் விலங்குகள் எவை ?
5. லிங்கத்தைக் கண்டு திண்ணன் யாது வினவினன் ?
6. திண்ணன் லிங்கப்பெருமானை வேண்டியது யாது ?
7. அவனது அன்புக்கு எல்லை இல்லை.—இதன் பொருள் யாது ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

52

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகள் மிகநினைந்து
விருப்பினொடும் தம்பணிகள் வேண்டுவன செய்வதற்கே
அருத்தியினால் ஒருப்பட்டங் காதனூர் தனில்நின்றும்
வருத்தமுறும் காதலினால் வந்தவ்வூர் மருங்கணைந்தார். 1

(திரு புன்கு ஊர் - அழகிய புன்குமரம் உள்ள ஊர்; திருப்புன்கூர். பணிகள் - தொண்டுகள். சிவலோகன்-திருப்புன்கூர் இறைவன் பெயர். அருத்தி-ஆசை. காதல் – ஆசை.)

சீரேறும் இசைபாடித் திருத்தொண்டர் திருவாயில்
நேரேகும் பிடவேண்டும் எனநினைந்தார்க் கதுநேர்வார்
காரேறும் எயிற்புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
போரேற்றை விலங்கஅருள் புரிந்தருளிப் புலப்படுத்தார். 2

(சீர்ஏறும் இசை - சிறப்பு மிக்க பாடல். திருத்தொண்டர்-நந்தனார், அதுநேர்வார்-அதை அவருக்கு அருள்புரிபவராய். கார் - மேகம். எயில் - மதில். விலங்க - விலகும்படி. புலப்படுத்தார் - தரிசனம் தந்தருளினார்.)

சிவலோகம் உடையவர்தம் திருவாயில் முன்நின்று
பவலோகம் கடப்பவர்தம் பணிவிட்டுப் பணிந்தெழுந்து
சுவலோடு வாரலையப் போவார்பின் பொருசூழல்
அவலோடும் அடுத்ததுகண்(டு) ஆதரித்துக் குளம்
[தொட்டார். 3

(பவலோகம் - பிறவிக்குக் காரணமாகிய இவ்வுலகம். தம்பணிவிட்டு-இறைவனை வழிபடுதலை முடித்துக்கொண்டு. சுவல் - முதுகு. சூழல் - இடம். அவல்-பள்ளம். ஆதரித்து-அன்பு செய்து. தொட்டார் - தோண்டினார்.)

---

* பெரிய புராணம்—திருப்புன்கூரில் நந்தனார்.
ஆசிரியர் : சேக்கிழார்.

வடங்கொண்ட பொன்னிதழி மணிமுடியார் திருவருளால்
தடங்கொண்ட குளத்தளவு சமைத்ததற்பின் தம்
[பெருமான்
இடங்கொண்ட கோயில்புறம் வலங்கொண்டு பணிந்
[தெழுந்து
நடங்கொண்டு விடைகொண்டு தம்பதியில் நண்ணினார். 4

(பொன் இதழி வடம் - பொன்னிறமான கொன்றைப் பூமாலை. வலங்கொண்டு-வலமாகச் சுற்றி. நடம்கொண்டு - ஆனந்தக் கூத்தாடி. விடைகொண்டு - பிரியா விடை கொண்டு. தம் பதி - ஆதனூர்.)

கேள்விகள் :—

1. நந்தனார் எங்கிருந்து திருப்புன்கூர்க்குச் சென்றார் ?
2. அவர் எந்த மனநிலையில் அங்குச் சென்றார் ?
3. கோவிலைக் குறுகிய நந்தனார் விரும்பியது யாது ?
4. அவர் விருப்பம் எப்படி முற்றுப்பெற்றது ?
5. பவலோகம் கடப்பவர் யாவர் ?
6. அவர் எங்குக் குளம் தொட்டார் ?
7. அவர் எவ்வாறு இறைவனிடம் விடை பெற்றார் ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

53

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* " தாண்டிய தாங்கக் கருங்கட லுடுத்த
தரணியிற் றளந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன் ;
மேருவி னிடைத்தவம் பூண்டேன் ;

---

* பாரதம்—கன்னன் கொடைச் சிறப்பு.
ஆசிரியர் : வில்லிபுத்தூரார்.

ஈண்டிய வறுமைப் பெருந்துய ருழந்தேன்;
இயைந்ததொன் றிக்கணத் தளிப்பாய்;
தாண்டிய கவனத் துரகதத் தடர்ந்தேர்ச்
சுடர்தரத் தோன்றிய தோன்றல்." 1

(தாண்டிய - மோதுகிற. தரங்கம் - அலை. தருதி - கொடுக்கின்றனை. ஈண்டிய - மிக்க. உழந்தேன் - அநுபவித்தேன். இயைந்தது ஒன்று - (உன்னால்) கொடுக்கக் கூடுவதொரு பொருளை. கவனம் - நடை. துரகம் - குதிரை. சுடர் - சூரியன். தோன்றல் - மகனே.)

என்றுகொண் டந்த அந்தணன் உரைப்ப
இருசெவிக் கமுதெனக் கேட்டு
வென்றிகொள் விசயன் விசயவெங் கணையால்
மெய்தளர்ந் திரதமேல் விழுவோன்,
நன்றென நகைத்துத் " தரத்தகு பொருணீ
நவில்கெ"ன நான்மறை யவனும்
" ஒன்றிய படிநின் புண்ணியம் அனைத்தும்
உதவுகெ"ன் றனுமுள மகிழ்ந்தான். 2

(அந்தணன் - அந்தணன் வடிவத்தில் வந்த கண்ணன். வென்றி - வெற்றி. விசயன் - அருச்சுனன். விசயவெம் கணை - வெற்றியையுடைய கொடிய அம்பு. விழுவோன் - கன்னன். நவில்க - சொல்வாயாக. ஒன்றிய - (இதுவரையில்) சேர்ந்திருக்கும்.)

" ஆவியோ நிலையிற் கலங்கிய(து); யாக்கை
அகத்ததோ? புறத்ததோ? அறியேன்;
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்;
ஓவிலா(து) யான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன்; கொள்கநீ; உனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகாலன் என்றால்,
புண்ணியம் இதனினும் பெரிதோ!" 3

(ஆவி - உயிர். வேண்டும் பொருள் எல்லாம்-(வேண்டு வார்) வேண்டும் பொருள்களை எல்லாம். நயக்கும் - விரும் பிக் கொடுக்கும். பக்குவம் - சமயம். ஓவு இலாது - ஒழிதல் இல்லாது. அயன் - பிரமன்.)

என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச,
இறைஞ்சலர்க் கெழிலியே றனையான்,
கன்னனை உவகைக் கருத்தினால் நோக்கிக்,
"கைப்புன லுடன்தரு கெ"ன்ன,
அன்னவன் இதயத் தம்பின்வாய் அம்பால்
அளித்தலும் அங்கையால் ஏற்றான்
முன்னமோ ரவுணன் செங்கைநீர் ஏற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன். 4

(இறைஞ்சலர் - பகைவர். எழிலி ஏறு அனையான் - மேகத்தில் தோன்றும் இடியை ஒப்பவனான கண்ணன். கைப்புனல் - கையினால் தாரை வார்க்கும் நீர். அன்னவன்- கன்னன். அம்பின்வாய் - அம்பின் மூலமாக வரும். அம் பால் - (செந்)நீரினால்; இரத்தத்தால். முன் - வாமனாவ தாரத்தில். அவுணன் - மாவலி.)

கேள்விகள் :—

1. 'வேண்டிய தருதி நீ'—யாருக்கு ?
2. 'இயைந்ததொன் றிக்கணத் தளிப்பாய்' - என்று வேண்டினவன் தன்னை எப்படி அறிமுகப்படுத்திக் கொண்டான் ?
3. 'சுடர்தரத் தோன்றிய தோன்றல்'—எவன் ? 'சுடர்' எவ்வாறு சிறப்பிக்கப்பட்டது ?
4. அந்தணன் உரைத்தது கன்னனுக்கு எப்படி இருந் தது ?
5. அப்பொழுது கன்னன் எந்நிலையில் இருந்தான் ?
6. கன்னன் அந்தணனுக்கு யாது கூறினான் ?
7. அதற்கு அந்தணன் கூறியது யாது ?
8. கன்னன் தன் நிலைமையை எங்ஙனம் விளக்கினான் ?

9. அவன் யாது கூறி வருந்தினான்?
10. அவன் அந்தணனை யாது கூறிச் சிறப்பித்தான்?
11. கன்னன் எப்படிப்பட்டவன்?
12. அந்தணன் எவ்வாறு தானம் பெற்றான்?
13. அந்தணனாக வந்து ஏற்றவன் யாவன்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

54

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

*" ஆயின்மறை முதற்கலைகள்
அனைத்து(ம்)உணர்ந்(து) அறம்மறம்பாத்(து)

ஏயின்இது நன்றிதுதீ(து)
என்றுணர்த்தும் அவர்நட்பை

வீயினுந்தான் மறப்பர்களோ
மேதையோர்? மறப்பரேல்,

நாயினுங்கீழ்ப் பட்டவர்கள்
அவர்காண்இந் நானிலத்தே. 1

(மறை - வேதம். அறம் மறம் - புண்ணிய பாவம். பாத்து - பகுத்து அறிந்து. வீயினும் - அழியினும். மேதையோர் - மேன்மையுடையோர்.)

" பேயோடு பழகுறினும்
பிரிவதரி தரிதென்று

தூயோர்கள் மொழிவரால்;
தூயோரும் புகழ்தூயோர்

---

* குசேல உபாக்கியானம்—நட்பின் சிறப்பு.
ஆசிரியர்: தேவராஜப் பிள்ளை.

ஆயோர்கள் பெருநட்பை
அருந்தவத்தால் பெறலன்றி

ஏ ஓஎண் மையின்கிடைப்பின்
இகழ்வரோ இகழ்வில்லார்? 2

(அன்றி - அல்லாமல். ஏ, ஓ - இகழ்ச்சிக் குறியைக் காட்டும் இடைச் சொற்கள். எண்மை - சுலபம்.)

"சமையம்வரின் இடித்துரைப்பார்;
தக்கவழி செலச்செய்வார்;

இமையவர்தம் உல(கு)உறவும்
இருளுலகம் பகையுமாய்

அமையஅறி(வு) உறுத்துவார்;
அந்தோ, நூல் கற்றுணர்ந்த

கமையுடையார் நட்பெவர்க்குக்
காண்கிடைக்கும்? அரிதரிது. 3

(சமையம்-சமயம் என்பது எதுகை நோக்கித் திரிந்தது. இடித்து உரைத்தல் - அஞ்சாது சிறிதளவு கடுமையாய்ப் பேசித் திருத்துதல். உறவு - தொடர்புடையது. இருள் உலகம் - நரகம். கமை - அமைதி. காண் கிடைக்கும் - காணக் கிடைக்கும்.)

"கூடுதற்குக் கூடாத
கூட்டத்துப் படுநட்பு

வீடுதற்குத் தக்கதாய்
நாடோறும் மெலிந்தொழியும்;

நீடுதற்குத் தக்கதுநன்
னெறிநின்றோர் நட்(பு)ஒன்றே;

தேடுதற்குக் கிடையாத
திரவியமும் அஃதாமால்." 4

(வீடுதல் - அழிதல். நீடுதல் - நெடுநாள் இருத்தல் திரவியம் - செல்வம்.)

கேள்விகள் :—

1. எவரது நட்பை மறப்பவர் நாயினும் கீழ்ப்பட்டவர் ஆவர் ?
2. தூயோர் யாது மொழிவர் ?
3. அருந்தவத்தால் பெற வேண்டுவது யாது ?
4. கற்றுணர்ந்தார் என்னென்ன செய்வர் ?
5. நாடோறும் மெலிந்தொழிவது யாது ?
6. நீடுதற்குத் தக்கது எது ?
7. அதன் சிறப்பு யாது ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நம் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

55

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

*" தருவனத்துள் யான்இயற்றும் தவவேள்விக்(கு)
இடையூறாய்த் தவஞ்செய் வோரை
வெருவரச்சென் றடைகாம வெகுளிஎன
நிருதரிடை விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்திஎன நின்சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதி"யென உயிர்சர்க்கும்
கொடுங்கூற்றின் உளையச் சொன்னான். 1

(தரு - மரம் பொருந்திய. வெகுளி - கோபம். நிருதர் - அரக்கர். இடை விலக்கா வண்ணம் - நடுவே தடுக்காவண்ணம். செருமுகம் - போர்முகம். காத்தி – காப்பாற்றுவாய். கரிய செம்மல் - இராமன். உளைய - வருந்த.)

---

* கம்ப ராமாயணம்—தசரதனும் கோசிகனும்.
ஆசிரியர் : கம்பர்.

எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தால்
எனச்செவியில் புகுத லோடும்,
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த,
ஆருயிர்நின் றூசல் ஆடக்
கண்ணிலான் பெற்றிழந்தான் எனஉழந்தான்
கடுந்துயரம் கால வேலான். 2

(தவத்தோன் - விஸ்வாமித்திரன். மருமம் - மார்பு. புண நிலாம் - புண் பொருந்திய. பெரும்புழை - பெரிய துளை. கனல் - நெருப்புக்கோல். உள் நிலாவிய - உள் தங்கிய. பெற்று இழந்தான் - கண் பெற்று மீண்டும் இழந்தான்; அஃதாவது, பிள்ளை இல்லாது வருந்திப் பின் பெற்ற தசரதன், பின்னும் அவரை இழந்தான்போல. உழந்தான்- வருந்திஞன். காலன் - யமனை ஒத்த.)

தொடையூற்றில் தேன்துளிக்கும் நறுந்தாரான்
ஒருவண்ணம் துயரம் நீங்கிப்,
"படையூற்றம் இலன்;சிறியன் இவன்;பெரியோய்
பணிஇதுவேல், பனிநீர்க் கங்கை
புடையூற்றும் சடையானும் புரந்தரனும்
வெகுண்டெழுந்து புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூருய் யான்காப்பன்;
பெருவேள்விக் கெழுக" என்றான். 3

(தொடை - மாலை. நறுந்தாரான் - நல்ல மாலையையுடையான். படையூற்றம் - படை எடுக்கும் ஆற்றல். பனி - குளிர்ந்த. புடை - பக்கம். சடையான் - சிவன். புரந்தரன் - இந்திரன். வெகுண்டு - கோபித்து. இடையூறு - துன்பம்.)

என்றனன்;என் றலுமுனிவோ(டு) எழுந்தனன்மண்
படைத்தமுனி; இறுதிக் காலம்

அன்றெனஆம் எனஇமையோர் அயிர்த்தனர்;மேல்
வெயில்கரந்த(து); அங்கும் இங்கும்

நின்றனவும் திரிந்தன;மீ நிவந்தகொழுங்
கடைப்புருவம் நெற்றி முற்றச்

சென்றன;வந் ததுநகையும்; சிவந்தனகண்;
இருண்டனபோய்த் திசைகள் எல்லாம். 4

(மண் படைத்த முனி - விஸ்வாமித்திரன். இறுதிக காலம் - யுகமுடிவு; பிரளய காலம். அயிர்த்தனர் - சந்தேகித்தனர். கரந்தது - மறைந்தது. மீநிவந்த - மேல் ஓங்கிய. நகை - கோபச் சிரிப்பு.)

கேள்விகள் :—

1. 'உயிர் ஈர்க்கும் கொடுங்கூற்றின் உளையச் சொன்னான்'—சொன்னது யாது?
2. 'அருந்தவத்தோன் இயம்பிய சொல்' தசரதற்கு எவ்வாறு இருந்தது?
3. அவன் 'உழந்தான் கடுந்துயரம்'—யாரைப் போல?
4. 'நறுந்தாரான்' முனிவனை நோக்கி யாது கூறினான்?
5. அவன் கூறியவுடன் முனிவன் என்ன செய்தான்?
6. அவனிடம் காணப்பட்ட குறிகள் யாவை?
7. உலகத்தில் உண்டான மாறுபாடுகள் யாவை?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நம் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

56

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

*"ஆறணியுஞ் சடைமுடியார்
அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெரும் தண்ணீர்ப்பந்
தரில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்எழுத
வேண்டியகா ரணமென்கொல்?
கூறும்" என எதிர்மொழிந்தார்
கோதில்மொழிக் கொற்றவனார். 1

(ஆறு - கங்கை. கோது - குற்றம். மொழிக் கொற்றவனார் - மொழிக்கரசனார்; நாவுக்கரசர்.)

நின்றமறை யவர்கேளா
நிலைஅழிந்த சிந்தையராய்,
"நன்றருளிச் செய்திலீர்!
நாணிலமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூழ்ச்சி
திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர்தம் திருப்பேரோ
வேறொருபேர்?" எனவெகுள்வார். 2

(மறையவர் - அப்பூதியடிகள். நிலை அழிந்த - ஒருமை கெட்ட. நன்று அருளிச் செய்திலீர் - நன்றாகக் கூறவில்லை. நாண் இல் அமண் பதகர் - வெட்கமற்ற அமண் பாதகர். ஒன்றிய - சேர்ந்த. மன்னன் - மகேந்திர வர்மன். திருத் தொண்டின் உறைப்பு - தொண்டின் மிகுதியாலே. வெகுள்வார் - கோபிப்பார்.)

"பொங்குகடல் கல்மிதப்பில்
போந்தேறும் அவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தில்
அறியாதார் யாருளரே?

---

* பெரிய புராணம்—அப்பூதி அடிகளின் அன்பு.
ஆசிரியர்: சேக்கிழார்.

மங்கலமாந் திருவேடத்
துடனின்றிவ் வகைமொழிந்தீர் ;

எங்குறைவீர் ? நீர்தாம்யார் ?
இயம்பும்'' என இயம்பினார். 3

(அம் க(ண்)ணர் - அழகிய கண்ணை உடையவர். புவனம் - உலகம். மங்கலமாம் - அழகாகும். திருவேடம் - சைவத் திருவேடம்.)

திருமறையோர் அதுமொழியத்
திருநாவுக் கரசரவர்,

பெருமையறிந் துரைசெய்வார் :
"பிறதுறையி னின்றேற

அருளுபெருஞ் சூலையினால்
ஆட்கொள்ள அடைந்துய்ந்த

தெருளுமுணர் வில்லாத
சிறுமையேன் யான்'' என்றார். 4

(மறையோர் - அப்பூதியார். பிறதுறை - சமணத் துறை. அருளு - இறைவன் அருளிய. சூலை - வயிற்று நோய். தெருளும் - தெளியும். சிறுமையேன் - சிற்றறிவினை உடையேன்.)

கேள்விகள் :—

1. 'கோதில் மொழிக் கொற்றவனார்'—யார் ?
2. அவர் அப்பூதியாரை யாது கேட்டார் ?
3. அவ்வாறு கேட்டதற்கு அப்பூதியார் யாது கூறி வெகுண்டார் ?
4. 'அறியாதார் யாருளர் ?'—எதனை ? எப்படி அறிந்தனர் ?
5. 'இயம்பும்' என்று அப்பூதியார் கேட்டவை யாவை ?
6. அதற்குத் திருநாவுக்கரசர் தந்த பதில் யாது ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

57

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

*"கல்லென்றுயர் தோளாய் ! கவு
சிகன்எண்ணுதல் அல்லால்
இல்லென்பதும் உளதென்பதும்
யாம்எண்ணுதல் தகுமோ ?
எல்லொன்றினி அவதித்தினம்
எனையும்மக னையும்நீ
வில்" என்றனள் கற்புக்கொரு
வித்தாகி உதித்தாள். 1

(கவுசிகன் - விஸ்வாமித்திரன். இனி அவதித்தினம் - (கெடுவின்) கடைநாள். எல்லொன்று - ஒரு பகலே. வித்து - விதை. உதித்தாள் — சந்திரமதி.)

மெள்ளச்செல நாணஞ்செல
விரையச்செல வாய்மை
தள்ளப்புதல் வனையும்மயில்
தனையுமுன் நடத்தி
உள்ளத்துயர் அறிவாகிய
உரனால்உகு விழிநீர்
வெள்ளத்தினை அடையாஇறை
விலைகூறி நடந்தான். 2

(நாணம்செல - நாணம் புகுதலின் (மெல்லச் செல). விரைய - விரைந்து. மயில் - சந்திரமதி. உரன் — வல்லமை. அடையா - அடைத்து. இறை - அரிச்சந்திரன்.)

" தாஸத்தறம் உணராதுயிர்
தளரும்படி பலசெய்

---

* அரிச்சந்திர புராணம்—சந்திரமதி விலைப்படலம்.
ஆசிரியர் : ஆசு கவிராயர்.

மேலைப்பழ வினைபற்றிட
விற்கின்றனன் வினையேன் ;

வாலச்சிறு பருவத்(து)எ(ன்)நல்
மரபிற்புதல் வனையும்

நீலக்கயல் விழியாளையும்
நிதியுள்ளவர் கொண்மின்." 3

(தாலத்து - பூமியில். பல - பல துன்பங்கள். வால - இளைய. மரபு - குலம். நீலக் கயல் விழி - நீல மலர் போல் நிறமும் கயல்போல் பிறழ்ச்சியுமுடைய விழியுடைய சந்திரமதி.)

" தவருக்கல(து) அயிராவதம்
எனும்கீள்கர சைலத்

தவருக்கல(து) அளகாபுரி
அரசுக்கல(து) அலைசேர்

உவரிக்கடல் புடைசூழ்வியன்
உலகத்திடை உறுவார்

எவருக்கெளி(து) இவருக்குறு
விலைநல்குவ(து)" என்பார். 4

(தவர் - தவசிகள். அயிராவதம் - ஐராவதம் என்னும் யானை. கர சைலத்தவர் - யானையையுடைய இந்திராதி தேவர். கரசைலம் - கையை யுடைய மலை; யானை. அளகாபுரி அரசு - குபேரன். வியன் - பெரிய. என்பார் - என்று கண்ட மக்கள் கூறினார்.)

" மண்மின்னென வருமென்மனை
வியையும்மக னையும்நீர்

கொண்மின் "என விலைகூறிய
கோமான்உரை கேளா,

' விண்மின் 'என அலையும்புரி
வெண்ணூல்அணி மார்பன்

கண்முன்னொரு மறையோன்அதி
களவோடெதிர் வந்தான்.

(மண் மின் என - ஆகாயத்திலன்றி மண்மீது தோன்றும் மின்னலைப் போல. வெண்ணூல் - பூணூல். அதிகளவு- விசுவாமித்திரன் கற்பனை).

கேள்விகள் :—

1. 'கற்புக்கொரு வித்தாகி உதித்தாள்' கணவனை நோக்கி யாது கூறினாள்?
2. 'இறை விலை கூறி நடந்தான்'—என்பது எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
3. இறை யாது கூறி விற்கத் தொடங்கினான்?
4. அவர்களை விலை கொடுத்து வாங்கத் தக்கார் யாவர்? வாங்கத் தகாதவர் யாவர்?
5. கோமான் யாது சொல்லி விலை கூறினான்?
6. 'விண்மின்' என வந்தவன் யாவன்?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

58

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக:—

*"போரினில் துணைவ ரோடும்
புயங்ககே தனனை வென்று
பா(ர்)எனக்(கு) அளித்தி நீயே
என்றுளம் பரிவு கூர்ந்தேன்;
நே(ர்)உனக்(கு) ஒருவர் இல்லாய்!
நீகளம் பட்டா யாகில்,

---

* பாரதம்—(அபிமன்னன் இறந்த காலத்து) விசயன் புலம்புதல்.
ஆசிரியர்: வில்லிபுத்தூரார்.

ஆ(ர்)இனிச் செருக்க வல்லார்?
ஐவருக்(கு) உரிய கோவே! 1

(புயங்கம் - பாம்பு. கேதனன் - கொடியை உடையோன்; துரியோதனன். பரிவு - விருப்பம். களம் - போர்க்களம். படுதல் - இறத்தல். செகுத்தல் - (பகைவரை) அழித்தல்.)

"கதிரவன் உதிக்கும் முன்னே
கண்துயில் உணர்த்தி, என்னை

அதி(ர்)அமர்க் கோலம் கொள்வான்
அறிவுறுத்(து) உரைக்க வல்லாய்!

முதி(ர்)அமர் முருக்கி மீண்டேன்;
இத்தனைப் போதும் முன்போல்

எதிர்வரக் காண்கி லேன்;இங்(கு)
இல்லையோ? என்செய் தாயோ? 2

(கொள்வான் - கொள்ளும் வண்ணம். முருக்கி - (பகைவரை) அழித்து.)

"தந்திரம் யாவும் இன்றித்
தனித்துநீ தானே போர்செய்(து),

அந்தரம் அமையும் என்(று)இவ்
அகலிடம் துறந்த ஐயா!

மைந்துடன் நம்மைக் காண
மகன்மகன் வருகின் று(ன்)என்(று)

இந்திரன் ஏவ உன்னை
இமையவர் எதிர்கொண் டாரோ! 3

(அந்தரம் - வானுலகம். மைந்து-வலிமை. மகன்மகன் - பேரன்; அபிமன்யு. இமையவர் - தேவர்.)

"தேர்அழிந்(து) எடுத்த வில்லும்
செங்கதிர் வாளும் இன்றி,

ஓர்உத வியும் பெறாமல்
ஒழிந்(து)உயிர் அழிந்த மைந்தா!

போரமர் உடற்றி நீயப்
பொன்நகர் அடைந்த போ(து), உன்
பே(ர்)அமர் ஆண்மை கேட்டுப்
பிதாமகன் என்சொன் ஞனே! 4

(அழிந்து - உடைந்து. உடற்றி - செய்து. பொன்நகர் - தேவர் உலகம். பிதாமகன் - இந்திரன் (தன் பிதாவை மகனுய்ப் பெற்றவன்) ; பாட்டன்.)

"மற்புயக் குன்றில் ஒன்று
வாளுடன் வீழ்ந்த பின்னும்,
பொற்(பு)உறப் பொருத நீஅப்
பொன்உல(கு) அடைந்த காலே,
அற்புதப் படைகள் வல்லாய்!
அபிமனே! அமரர் ஊரும்
கற்பகக் காவும் வானில்
கங்கையும் காட்டி ஞரோ! 5

"வளைத்தவில் நிமிரா வண்ணம்
வாளியால் மாவுந் தேரும்
துளைத்துமுன் காலா ளாகத்
துரோணனைத் துறந்த வீரா!
திளைத்தவெஞ் சமரில் நொந்து
தனஞ்சயன் சிறுவன் மேனி
இளைத்த(து)என்(று) இந்தி ராணி
இன்னமு(து) ஊட்டி ஞளோ!" 6

(வாளி - அம்பு. மா - குதிரை. கால்ஆளாக - கால் நடையாக. துறந்த - துறத்திய. தனஞ்சயன் - அருச்சுனன்.)

கேள்விகள் :—

1. 'ஆர் இனிச் செகுக்க வல்லார் !' என்று வருந்துவானேன் ?
2. அபிமன் காலையில் யாது செய்வது வழக்கம் ?
3. அபிமனுக்குத் தேவலோகத்தில் நடந்திருக்கத் தக்க சிறப்புகள் யாவை ?
4. அபிமன் வீரத்தைப்பற்றி நீ யாது அறிவாய் ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

59

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக :—

* "ஏவரே உலகந் தந்தார் ?
என்பெயர் ஏத்தி வாழும்
மூவரே ? யல்ல ராகின்
முனிவரே ? முழுதுந் தோற்ற
தேவரே ? பிறரே யாரே ?
செப்புதி தெரிய" என்றான்
கோவமூண் டெழுந்துங் கொல்லான்
காட்டுமேற் காட்சி கொள்வான். 1

(ஏவரே - யார். ஏத்தி - வணங்கி. மூவர் - நான்முகன், சிவன், திருமால். தெரியச் செப்புதி - விளங்கச் சொல்வாய்.)

என்றலும் அவுணர் வேந்தன்
எயிற்றிணை இலங்க நக்கான் ;
" ஒன்றல பொருள்கள் எல்லாம்
ஒருவன்புக்(கு) உறைவன் என்றாய் ;

---

* கம்ப ராமாயணம்—பிரகலாதன் பக்திச் சிறப்பு.
ஆசிரியர் : கம்பர்.

நன்றது காண்டும் பின்னும்
　　நல்லவா புரிதுந் தூணில்
நின்றுளன் என்னிற் கள்வன்
　　நிரப்புதி நிலைமை "என்ருன். 2

(அவுணர் - அசுரர். எயிறு இணை - இரண்டு வரிசைப் பற்களும். இலங்க - தோன்ற. நக்கான் - சிரித்தான். காண்டும் - காண்போம். நிலைமை நிரப்புதி - அதனை உண்மையாக்குக.)

" சாணினு முளனோர் தன்மை
　　அணுவினைச் சதகூ றிட்ட
கோணினும் உளன்மா மேருக்
　　குன்றினும் உள(ன்)இந் நின்ற
தூணினும் உள(ன்)நீ சொன்ன
　　சொல்லினும் உளனித் தன்மை
காணுதி விரைவின் " என்ருன்
　　நன்றெனக் கனகன் நக்கான். 3

(சாண் - 16 விரற்கிடை அகலம். சதம்-ஆயிரம். கூறு - பங்கு. கோணினும் - சிறுகூறினும். காணுதி - காண்பாய். கனகன் - இரணியன். நக்கான் - சிரித்தான்.)

" உம்பர்க்கும் உனக்கும் ஒத்(து)இவ்
　　வுலகெங்கும் பரந்து ளானைக்
கம்பத்தின் வழியே காணக்
　　காட்டுதி ; காட்டா யாகில்,
கும்பத்தின் கரியைக் கோண்மாக்
　　கொன்றென நின்னைக் கொன்றுன்
செம்பொத்த குருதி தேக்கி
　　உடலையுந் தின்பன் " என்ருன். 4

(உம்பர் - தேவர். கம்பம் - தூண். காட்டுதி - காட்டு வாயாக. கும்பம் - மத்தகம். கரி - யானை. கோள்மா - கொள்ளுதலில் தப்பாத சிங்கம். செம்பொத்த குருதி-சிவந்த இரத்தம்.)

“என்னுயிர் நின்னாற் கோறற்(கு)
எளியதொன் றன்று ; யான்முன்
சொன்னவன் தொட்ட தொட்ட
இடந்தொறும் தோன்றா னாகில்,
இன்னுயிர் யானே மாய்ப்பன் ;
பின்னும்வாழ் வுகப்பன் என்னின்
அன்னவற்(கு) அடியன் அல்லேன்”
என்றனன் அறிவின் மிக்கான். 5

(கோறல் - கொல்லுதல். முன் சொன்னவன் - திருமால். மாய்ப்பன் - (உயிர்) நீங்கும்படி செய்வேன். வாழ்வு உகப்பன் என்னில் - வாழ்க்கையை விரும்புவேனாகில். அன்னவற்கு - திருமாலுக்கு. அறிவின் மிக்கான் - அறிவில் மிகுந்தவனான பிரகலாதன்.)

கேள்விகள் :—

1. அவுணர் வேந்தன் மகனை நோக்கி யாது கேட்டான் ?
2. மகனது பதிலைக் கேட்ட அவுணன் யாது சொன்னான் ?
3. மைந்தன் கடவுளைப்பற்றி யாது சொன்னான் ?
4. வேந்தன் மகனைக் ‘காட்டுதி’ என்றான்.—யாரைக் காட்டச் சொன்னான் ?
5. அங்ஙனம் அவன் காட்டாவிட்டால் அவனை என்ன செய்வதாகச் சொன்னான் ?
6. ‘அறிவின் மிக்கான்’ அளித்த பதில் யாது ?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நம் சொற்களால் அமைத்து 15 வரிக்குள் எழுதுக.

60

I. கீழ்க்காணும் செய்யுட்களைப் படித்துப் பின்வரும் வினாக்கட்கு முழு வாக்கியங்களாக விடை எழுதுக:—

* பணமே எனைப்படைத்த பாக்கியவா னே,வங்
கணமே,என் ஆருயிரே, கண்ணே—குணநிதியே, 1

(வங்கணம் - நட்பு.)

காடுநா டாக்குவாய், கண்விழித்து மூடுமுன்னே
நாடுகா டாக்குவாய்; நம்பிநீ—ஓங்கும் 2

(நம்பி - ஆண்களிற் சிறந்தவன்.)

பணம்என்னும் உன்னைப் படைக்காத சென்மம்
பிணம்என்பர் கண்டாய் பெரியோய்,—இணையிலாத் 3

தந்தரத்துக் கொவ்வாது தாழ்ந்தகுல மானாலும்
வந்தெடுத்துப் பெண்கொடுக்கும் மாமனே— 4

(தரம் - தகுதி.)

* * * *

—நாத்திருந்த

ஓது கலைஞானம் உள்ளதெல்லாம் கற்றுநன்றாச்
சாதிக்க வைக்குந் தகப்பனே,—பேதிக்கப் 5

(சாதித்தல் - உண்மையை நிலைநாட்டல்.)

போய்க்கொடிய கானம் புகுந்தாலும் அவ்வனத்தில்
வாய்க்கினிய சோறூட்டும் மாதாவே. 6

* பணவிடு தூது—பணச் சிறப்பு.

கேள்விகள் :—

1. 'நம்பி' ஆகிய பணம் என்னென்ன செய்ய வல்லது?
2. 'பிணம்' எனப்படுபவர் யார்?
3. பணம் 'மாமன்' ஆதல் எங்ஙனம்?
4. பணம் 'தந்தை' ஆதல் எங்ஙனம்?
5. பணம் 'தாய்' ஆதல் எங்ஙனம்?
6. பணம் வேறு என்னென்ன சொற்றொடர்களால் சிறப்பிக்கப்பட்டுள்ளது?

II. மேற்கண்ட செய்யுட்களின் திரண்ட கருத்தை நும் சொற்களால் அமைத்து 10 வரிக்குள் எழுதுக.

Printed at The Jupiter Press, Ltd., Madras—MS. 8—2-11-1945.